
4
அணா

OFFICE OF THE REG...
4 JUL 1951



382 Persons are awarded prizes in our competition No. 52. (1st Prize 338 persons, 3rd Prize 41 and Vth Prize 3 persons.)

Full particulars are published in the Rainbow dated 25—6—51

ரிஜிஸ்டர் நெ. 249

# ரூ. 25,000 பரிசு

போட்டி நெ. 54

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர் களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றாம் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY B. NO. 52 = 68 TO 83 = 302

| | | | |
|---|---|---|---|
| 78 | 81 | 69 | 74 |
| 72 | 71 | 83 | 76 |
| 75 | 68 | 80 | 79 |
| 77 | 82 | 70 | 73 |

We hereby certify that the above is the solution in original deposited with *Rainbow Competitions No.* 52 on 19-5-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank

*For The Premier Bank of India Ltd*

[signature] 19/6/51

Agent, Madras

முடிவு தேதி 12-7-51 விடை 27-7-51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

310

| | | | |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 70 முதல் 85 வரையுள்ள எண் களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இட மிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 310 வரும்படி யாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோ கிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் முலமாகவோ அல்லது மணியார்டர் முலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களு டன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவது மாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

## THE RAINBOW COMPETITIONS No. 54

28 (14) Thandavarayagramani Street, MADRAS - 21

## பொன்னி வெளியீடுகள்

தோழர் இளமைப்பித்தன் சிறுகதைகளில் தமிழ் மக்களுக்கு ஆர்வம் உண்டு. அவருடைய மூன்றுவது சிறுகதைத் தொகுதி:

**நினைவுச் சின்னம்** ரூ. 1—0—0

உணர்ச்சிச் சித்திரங்களைத் தீட்டுவதிலே நண்பர் எஸ். ஆறுமுகம் இணையற்றவர். அவருடைய முதல் கதைத் தொகுதி:

**கடல் முத்து** ரூ. 1—0—0

தோழர் டி. கே. சீனிவாசனின் ஒவ்வொரு கதையும் ஒரு சிந்தனைச் சித்திரம்! வாழ்க்கை விசித்திரங்களைப் பல கோணங்களில் எடுத்துக் காட்டும் அவர்தம் கதைக் கோவை:

**உலக அரங்கில்** ரூ. 1—0—0

தபாலாபீஸ் — பொதுமக்களுக்கு மிகத் தொடர்புள்ள இடம்; அங்கேதான் என்னென்ன வேடிக்கைகள் நிகழுகின்றன! அப்படிச் சில விநோதங்களைச் சுட்டிக் காட்டுவதுதான் நண்பர் க. சண்முகசுந்தரம் எழுதிய

**தபாலாபீஸ் விநோதங்கள்** ரூ. 0—8—0

---

தபாற் செலவு தனி. விற்பனையாளர்க்குத் தக்க கழிவு உண்டு

---

### பொன்னி லிமிடெட்

16, சேணியம்மன் கோவில் தெரு,
தண்டையார்ப்பேட்டை — சென்னை—21

மகத்தான
மனோரஞ்சிதம்
வெளியீடுகள்!

## காதற் பரிசு

'இளமைப்பித்தன்' எழுதிய அற்புதகாதற்கதைக்கொத்து! திருமணப் பரிசுக்கு உகந்தது. புத்தகத்திற்குச்'சுகி' அவர்கள் சிறப்பு முன்னுரை வழங்கியிருக்கிறார்.

விலை ரூ: 1—4—0

## வாடகை இரவு

ஆசிரியர் 'உமாரனின்' ஒப்பற்ற காதல் சிருஷ்டி! ஓர் பேதைப் பெண்ணின் வாழ்க்கையைத் தற்காலச் சூழ்நிலையின் போக்கில் படம்பிடித்துக் காட்டுகிறது.

(இரண்டாம் பதிப்பு அச்சில்)

விலை ரூ. 0—8—0

## இன்பப் பொய்கை

ஆசிரியர் ஜெகசிற்பியனின் கருத்தும், கவர்ச்சியும் நிறைந்த கற்பனை ஊற்று! சகோதர சகோதரி ஐக்கியத்தினால் ஜீவப்பிரளயம் தோன்றி இருக்கமுடியுமா? இக்கருத்தைத் துலக்கும் பின்னணியின் மத்தியில் ஊற்றாக ஊறியது இன்பப் பொய்கை.

(இது எமது புதிய வெளியீடு)

விலை ரூ. 0—8—0

விவரங்கட்கு :

**'மனோரஞ்சிதம்'**

1/13 செயின்ட் சேவியர் தெரு,
சென்னை—1.

பன்மொழிப் புலவர்
கா. அப்பாத்துரை
எழுதிய நூல்கள்

| | |
|---|---|
| வருங்காலத் தமிழகம் | 0–12–0 |
| சங்க இலக்கிய மாண்பு | 0—6–0 |
| இந்திய மொழிப் பிரச்னை | 2—8–0 |
| (ஆங்கில நூல்) | |

விவரங்கட்கு:

## பொன்னி லிமிடெட்

தண்டையார்ப்பேட்டை, சென்னை, 21

படிக்க வேண்டிய புத்தகங்கள்

1. இன்ப இரவு
"ராஜகுமாரி" எழுதியது
விலை அணா எட்டு.

2. இன்ப லாகிரி
"ஸ்ரீராம்" எழுதியது
விலை அணா எட்டு.

3. முகராத முல்லை
கரசிம்மராஜ் எழுதியது
164 பக்கங்கள், மூன்று கலர் முகப்பு
விலை ரூபாய் இரண்டு.

மூன்று புத்தகங்களும் வேண்டுவோர் ரூபாம் மூன்று மணியார்டர் செய்ய வேண்டும்.
விற்பனையாளர்களுக்குக் கமிஷன் 25%

விபரங்களுக்கு :

## மதி நிலையம்

201, தம்புச்செட்டித் தெரு, சென்னை-1

# பொன்னி

பொருளடக்கம்

மலர் 5 | ஜூன் 25, 1951 | இதழ் 8

திருவள்ளுவர் ஆண்டு 1982 ஆனித் திங்கள் 11-ம் நாள்

| | | | |
|---|---|---|---|
| எங்கள் கொள்கை | .... | கிருபளானி | 5 |
| சாப்பிடத் தயார் | .... | கார்ட்டூன் | 6 |
| பாரசீகம் | .... | தலையங்கம் | 7 |
| காலமும் கருத்தும் | .... | | 10 |
| வெறும் கலாட்டா | .... | கில்லாடி | 13 |
| பொழுது போக்கு | .... | இனியன் | 15 |
| அவள் மகிழ்ந்தாள் | .... | புதுமைவாணன் | 17 |
| பேராசை | .... | கலைமணி | 19 |
| நாயின் உதவி | .... | இன்பராஜ் | 26 |
| தமிழ் விருந்து | .... | தமிழ்த் தும்பி | 29 |
| சன்மானம் | .... | தேவநகர் இளஞ்சேரன் | 34 |
| பெண்கள் முன்னேற்றம் | .... | மங்கை | 43 |
| வேட்கை | .... | ஏ. எஸ். ராகவன் | 45 |
| வளரும் இலக்கியம் | .... | அரசன் | 51 |
| வெள்ளி முளைத்தது | .... | வீர. பழனியப்பன் | 56 |

## எங்கள் கொள்கை

இப்போதுள்ள நிர்வாக சாதனமானது இன்னும் திறமை கொண்டதாக இருக்கவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். கள்ள மார்க்கெட்டு, கொள்ளை லாபமடித்தல் பதுக்கல் முதலியவைகளெல்லாம் தெய்வ சோதனைகளென்று நாங்கள் கருதவில்லை. இவை மனிதனுடைய பலவீனங்கள். மனிதனாலேயே பரிகாரம் செய்துவிட முடியும். ஜனநாயகத்தை நாங்கள் பூர்ணமாக நம்புகிறோம். பேச்சு சுதந்திரம், எண்ண சுதந்திரத்தைப் பறிப்பதை நாங்கள் ஆதரிக்கவில்லை. பாக்கியுள்ள நாடு எவ்வளவாக இருந்தபோதிலும் அது ஒரே உறுப்பாக முழுசாக இருக்கவேண்டுமென்பது எங்கள் கொள்கை. மாகாணம் ஜாதி வர்க்கம் வகுப்பு சம்பந்தப்பட்ட அபிப்பிராய பேதங்கள், போட்டிகள் முதலியவைகளுக்கு ஊக்கமளிக்கக்கூடாது. எல்லோரும் முதலில் இந்தியாவென்றே சிந்திக்கவேண்டும். பிறகுதான் இதர நலன்களைக் கருத்தில் கொள்ளவேண்டும். இது எங்கள் கொள்கை.

[பாட்னாவில் புதுக் கட்சியின் தோற்றத்தை அறிவித்துக் கிருபளானி பேசியபோது இவ்வாறு குறிப்பிட்டார்]

"சாப்பிடத் தயார்!"




தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
197795
600 008

# பாரசீகம்

பாரசீகத்தில் எண்ணெய்க் கொந்தளிப்பு உச்சநிலை அடைந்திருக்கிறது! ஆங்கிலோ-ஈரானிய எண்ணெய்க் கம்பெனி, தேசீய ஈரானிய எண்ணெய்க் கம்பெனியாக மாற்றப்பட்டுவிட்டது. பாரசீக அரசாங்கம் எண்ணெய்க் கம்பெனியையும் அதன் உடமைகளையும், அலுவலகங்களையும் கைப்பற்றிக்கொண்டுவிட்டது.




பாரசீகத்தில் எண்ணெய்த் தொழிலைத் தேசீய மயமாக்க வேண்டுமென்பதற்காகவே டாக்டர் முஸாதிக் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் பதவிக்கு வந்ததும் தேசிய மயமாக்கும் சட்டம் நிறைவேற்றப்பட்டது. அந்தச் சட்டத்தை முதலில் பிரிட்டிஷ்காரர்கள் எதிர்த்துப் பார்த்தனர். பிரிட்டிஷ் அரசாங்கச் சார்பில் மறுப்புகளும் எதிர்ப்புகளும் கிளம்பின. பாரசீக அரசாங்கமோ, பிரிட்டிஷ் அரசாங்கம் இவ்விவகாரத்தில் தலையிடுவதை விரும்பவே இல்லை; எண்ணெய்க் கம்பெனிப் பிரதிநிதிகளோடு பேசுவதற்குத்தான் ஒப்புக்கொண்டது. பிரிட்டிஷ்காரர்கள் வழிக்கு வந்தனர். எண்ணெய்க் கம்பெனிப் பிரதிநிதிகள் பேச்சு வார்த்தை நடத்த டெஹ்ரானுக்கு வந்தனர். பேச்சு வார்த்தை நடந்தது. அமெரிக்கா 'சமாதானமாக விவகாரத்தை முடித்துக்கொள்ளுங்கள்' என்று தூபமிட்டுக்கொண்டே இருந்தது. லாபத்தில் 75 சதவீதத்தைப் பாரசீக அரசாங்கத்திற்குத் தந்துவிடவேண்டுமென்பது ஈரானியார்கள் கோரிக்கை. பிரிட்டிஷ் கம்பெனி இந்தக் கோரிக்கையை ஏற்கத் தயாராயில்லை. பேச்சு வார்த்தை முறிந்தது. டாக்டர் முஸாதிக் தேசீயத் திட்டத்தை நிறைவேற்றும்படி கட்டளையிட்டார். அந்தக் கட்டளை நிறைவேற்றப்பட்டுவிட்டது.

பாரசீக மக்கள் இந்த நிகழ்ச்சியைப் பெரிய கோலாகலமாகக் கொண்டாடியிருக்கிறார்கள். கேளிக்கை விழாவாக, எண்ணெய்த் தொழில் தேசீய மயமாக்கப்படும் நிகழ்ச்சி அமைந்ததில் வியப்பொன்றுமில்லை. பாரசீகம் வளமிருந்தும் வறுமையில் ஆட்பட்டுத் தவித்தது. உலகையே செழிப்புறச் செய்யும் எண்ணெய் வளம் அவர்கள் நாட்டில் ஊறிக்கொண்டிருக்கிறது. அந்த எண்ணெய்க் கிணறுகளைப் பிரிட்டிஷ் அரசாங்கமும் பிரிட்டிஷ் முதலாளிகளும் சொந்தமாக்கிக்கொண்டு, பாரசீக அரசாங்கத்திற்கு ஏதோ 'கப்பம்' கட்டிவிட்டு, மிஞ்சிய பெரும் ஊதியத்தையெல்லாம் தங்கள் வயப்படுத்திக்கொண்டு வந்திருக்கின்றனர். இரண்டாவது

உலகப் போருக்குப் பின்னர் ஏற்பட்ட விழிப்புணர்ச்சி, ஈரானிய மக்களிடமும் பரவியதில் ஆச்சரியமில்லை. தம் நாட்டு வளம், பிறர் நாட்டுக்குக் கொள்ளை போவதை அவர்கள் விரும்பவில்லை. அந்த வளத்தைத் தாமே பயன்படுத்தினால், நல்லதொரு சமுதாய மாக ஈரானியர் விளங்க முடியுமென்று அவர்கள் கண்டனர். இம் முடிவைக் காரியத்தில் நிறைவேற்றத் துணிந்தபோதுதான் பிரிட்டி ஷாருக்குச் சங்கடங்கள் வந்திருக்கின்றன! பிரிட்டிஷ் அரசாங்கம் இவ்விவகாரத்தைத் தீர்த்து வைக்கும்படி சர்வதேசக் கோர்ட்டுக்கு விண்ணப்பித்துக்கொண்டிருக்கிறது! பிரிட்டிஷ் குடும்பங்கள் தம் தாய்நாட்டுக்குப் பயணப்படக் காத்திருக்கின்றன. பிரிட்டிஷ் பார்லி மெண்டில் ஆத்திரமும் கொதிப்பும் பேச்சுக்களாக உருவெடுத் திருக்கின்றன. கன்சர்வேடிவ்கள் பாரசீக எண்ணெய்க் கோரிக் கையை ஆதரித்த நேருமீது வசை புராணத்தைப் பாடியிருக்கின்ற னர். பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் சிறுகச் சிறுகக் கலைக்கப்படு வதை அவர்களால் தாங்க முடியவில்லை என்பதைத்தான் இந்நிகழ்ச் சிகள் காட்டுகின்றன.

ஆனால் பிரிட்டிஷ் அரசாங்கம் அவசரப்பட்டு, ஆத்திரப்பட்டுப் போரை வருவிக்கும் எச்செயலிலும் ஈடுபடாதது பாற்றத்தக்கது தான். தேசிய மயமாக்கும் உரிமை பாரசீகத்திற்கு இருக்கிறதென் பதைக் கூடப் பிரிட்டிஷ்காரர்கள் ஒப்புக்கொள்கிறார்கள். ஆனால் ஒப்பந்தக் காலவரையறை தீருமுன் திடும்பிரவேசமாகக் கைப்பற்று வதுதான் அவர்கட்குப் பிடிக்கவில்லை. மேலும் ரஷ்யா தலையிடு மென்ற பீதி வேறு அவர்களை ஆத்திரப்படாமல் காத்துவருகிறது. அமெரிக்காவும் ஏனோதானோவென்று நடந்து கொள்கிறதே யொழியப், பிரிட்டனுக்கு ஆக்கம் தரும் முறையில் தன் நடவடிக்கை களை அமைத்துக் கொள்ளவில்லை. இக்காரணங்களால் பாரசீகத் தகராறு, உலக சமாதானத்திற்கு உலைவைக்கும் போராக மாறாமல் 'பொம்மலாட்டம்' ஆடுகிறது.

பாரசீக மக்கள், மகிழ்ச்சி வெறியில் தங்கள் பொறுப்பை மறந்துவிடக் கூடாது. எண்ணெய்க் கம்பெனியின் உடமைகள் நாசமாகாமல் கைப்பற்றப்பட வேண்டும்; தொழில் தொடர்ந்து நடைபெற வழிவகைகள் காணப்பட வேண்டும்; எண்ணெய் சப்ளை யிலும் தடை ஏற்படக்கூடாது; எத்தகைய குழப்பத்திற்கும் இட மின்றிக் காரியத்தில் கண்ணாயிருக்க வேண்டும்.

பிரிட்டிஷ்காரர்கள், ஈரானில் அமைதி குலைந்தால், இதுதான் சமயமென்று தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்ட முனைவார்கள். ரஷ் யாவும் அங்கே கொடி நாட்டுவது சிரமமான காரியமல்ல. மற்றொரு 'கொரியா' உருவாகிவிடும். எனவே, பாரசீக மக்கள் தங்கள் தேசிய

ஆர்வத்தோடு, கட்டுப்பாடுணர்ச்சியையும் காக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள். பிரிட்டிஷாரும் உலகப் போக்குணர்ந்து சமயத்திற்கேற்ப நடந்து, உலக அமைதியைக் காக்கப் பொறுப்பேற்க முன்வரவேண்டும். இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, பர்மா முதலிய நாடுகளிலெல்லாம் சுதந்தரக் கொடியைப் பறக்கவிட்டவர்களுக்கு இது ஒரு பெருங்காரியமல்ல.

வல்லரசுகளுக்குள் போட்டா போட்டி இருப்பது உலக அமைதிக்குக் கேடு தருகிறது என்றாலும், அதனாலும் நன்மை உண்டு என்று காட்டுகிறது பாரசீக எண்ணெய்த் தகராறு. இந்தப் போட்டா போட்டி இல்லாவிட்டால் ரஷ்யா தலையிடுமென்ற அச்சம் இல்லாவிட்டால், ஈரான் தேசிய மயமாக்கும் திட்டத்தை நிறைவேற்றுவதைக் கைகட்டி வாய்பொத்திப் பிரிட்டன் பார்த்துக் கொண்டிருக்குமென்று யார்தான் எதிர்பார்க்க முடியும்! பெரிய வல்லரசுகளின் எதிரெதிர்ப் பார்வைகளில் சிறுநாடுகளின் கோரிக்கைகள் எவ்வளவு எளிதாக நிறைவேறிவிடுகின்றன! பாரசீகம் இப்போக்குக்கு நல்ல எடுத்துக் காட்டு.



# காலமும் கருத்தும்

## புது விதிகள்

வகுப்புவாரி உத்தரவிற்குப் பதிலாகச் சென்னை அரசாங்கம் புதி விதிகளை வகுத்துத் தந்திருக்கிறது. அவ்விதிகளின்படிதான், இந்த ஆண்டு முதல் தொழிற் கல்லூரிகளில் மாணவர்கள் சேர்க்கப்பட இருக்கிறார்கள். சர்க்கார் நியமனங்களும் இவ் விதிப்படிதான் நிகழுமென்று அமைச்சர்கள் கூறியிருக்கிறார்கள். சென்னை மக்களைப் பொறுத்தவரையில், ஒரு புது அத்தியாயம் தொடங்குகிறது. இந்த அத்தியாயம் பயனுடையதாக இருக்குமா, அல்லவா என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும். நாம் எதிர்பார்த்ததுபோல் 40 சதவீதம் மட்டும் பிற்போக்கு வகுப்பினருக்கும், தாழ்த்தப்பட்டோருக்கும் ஒதுக்கிவிட்டுப் பாக்கி 60 சதவீதத்தைத் தகுதி திறமைப்படி போட்டா போட்டிக்கு விட்டிருக்கிறார்கள். ஆகவே வகுப்புவாரிப் பிரதிநிதித்துவத்தில் பொதிந்திருந்த சமூக நீதி — அதாவது வகுப்புக்கு இத்தனை இடம் என்று பிரிததுத்தந்த பொறுப்பு — தட்டிக் கழிக்கப்பட்டு விட்டது; அது மண்ணோடு மண்ணாகப் போய்விட்டது. பூசி மெழுகும் வகையில்தான் புது விதிகள் அமைந்திருக்கின்றன. பிற்போக்கு சமூகத்தினரிடமும் தாழ்த்தப்பட்டோரிடமும் அதிக அக்கறை காட்டுவது போல் காரியம் நடந்திருக்கிறது. ஆனால் நடைமுறையில இவர்களுக்கு ஒதுக்கப்படும் இடங்கள், அந்தந்த சமூகத்திலிருந்து நபர்கள் வாராததால் தகுதி, திறமைப் படியே வழங்கப்படும். ஆக 40 சதவீதம் ஒதுக்கியிருப்பதிலும், 'தகுதி திறமை' புக எத்தனையோ சந்தர்ப்பமிருக்கிறது. மேலும், தாழ்த்தப்பட்டோர், பிற்போக்கு சமூகத்தினர் என்று அரசாங்கம் குறிப்பிடுபவர்களைத் தவிர, படிப்பில் பிற்போக்கா யிருக்கும் சமூகங்கள் எத்தனையோ இருக்கின்றன. அவர்கள் இந்தத் தலைமுறையில்தான் படிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்களுக்கென்று சில ஸ்தானங்களை ஒதுக்காமல், "தலைமுறை தலைமுறையாகப் படித்துவந்தவர்களின் பிள்ளைகளோடு, போட்டா போட்டிக்கு நின்று இடத்தைப் பிடித்துக்கொள்ளுங்கள்" என்று விட்டிருப்பது ஏதோ சூது நடந்திருக்கிறதென்பதையே காட்டுகிறது. அல்லது முற்போக்கடைந்த சமூகத்தினர், பார்ப்பனர்கள் மட்டுமல்ல என்று அரசாங்கம் தன்னிடமுள்ள புள்ளி விவரங்களின்படி நிரூபிக்க முடியுமானால், அந்தச் சமூகங்களையும்

போட்டிக்கு விட்டு, மற்றவர்களுக்கு இடம் ஒதுக்கியிருக்க வேண்டும். அப்படியும் செய்யாமல், திறமைக் கூப்பாட்டுக்குச் செவிசாய்க்கும் முறையிலேயே காரியங்கள் நடந்திருப்பது வினோதமாய்த்தான் இருக்கிறது. அல்லது முற்போக்கடைந்த சமூகங்களுக்கு என்று சில சத வீதம் ஸ்தானங்களை ஒதுக்கிவிட்டு, மற்ற ஸ்தானங்களுக்கு அவர்கள் போட்டிக்கு வரக்கூடாது என்று விதித்திருக்கலாம். தகுதி, திறமையைக் கவனித்துப் பாக்கி ஸ்தானங்களை நிரப்பலாம். இப்படி எல்லாம் நிகழாமல்—நினைத்ததொன்று, நடந்ததொன்றாக முடிந்திருக்கிறது. ஆனால் ஒரேயொரு ஆறுதல் தரும் விஷயம் இருக்கிறது. மாணவர்களைப் பொறுக்கும்போது, அவர்களின் குடும்பத்திலுள்ள படிப்பு நிலைமை ஆராயப்படுமென்பதுதான் அது. இந்த ஆராய்ச்சியைச் சரிவர நிறைவேற்றினால், அதனுடைய முழுத்தன்மையும் விளங்கும்படி அமுலுக்குக் கொண்டுவந்தால், ஸ்தானங்கள் ஒதுக்குவது போன்ற அவசியம்கூட ஏற்படாதென்பது நம் கருத்து. புது விதிகள் எப்படி அமுல் செய்யப்படுகின்றன என்பதைப் பார்த்துக் கொண்டு அதைப்பற்றிப் பின்னர் விரிவாக எழுதுவோம்.

### பன்னிரண்டு அவுன்ஸ்

டில்லி உணவு அமைச்சர் முன்ஷி உள்ளம் மகிழும் நிகழ்ச்சியொன்று நடந்துவிட்டது. ஆம். அமெரிக்கா 20 லட்சம் டன் உணவுத் தான்யத்தை நமக்குக் கடனாகத் தரச் சம்மதித்துவிட்டது. தான்யத்தை ஏற்றிக்கொண்டு முதல் கப்பல்கூடப் புறப்பட்டு விட்டது. இந்த நிகழ்ச்சி, முன்ஷியாரின் உள்ளத்தில் மகிழ்ச்சியை வார்த்ததோடு நிற்கவில்லை; ஒன்பது அவுன்ஸ் பங்கீட்டை பன்னிரண்டு அவுன்ஸாகவும் உயர்த்தியிருக்கிறது; உணவு நெருக்கடியைச் சமாளித்துவிட்டோம் என்று முதல் அமைச்சர் நேரு முதல் சாதாரணக் காங்கிரஸ்காரர்கள் வரை 'உற்சாகப் பேச்சு'ப் பேச வாய்ப்பளித்திருக்கிறது—“ட்ருமன் வாழ்க”, “அவர் அனுப்பும் தான்யம் வாழ்க”, “அதனை ஏற்றிக்கொண்டு வரும் கப்பல் வாழ்க” என்று நீங்களும் மகிழ்ச்சியில் குதிக்கிறீர்கள் அல்லவா? சற்று பொறுங்கள். பாழாய்ப் போன அமெரிக்க நாட்டில் நெல் விளைவதில்லை. அப்படி எங்காவது கொஞ்ச நஞ்சம் விளைந்தாலும், நமக்கு அவர்கள் இப்போது அனுப்பவிருக்கும் 20 லட்சம் டன்னும் நெல்லல்ல; ஆம். அதனை மில்லில் அறைத்தால் அரிசி வராது. சோளம், கோதுமை இரண்டும் தான் நமக்கு அமெரிக்கக் கப்பல்களின் மூலம் கிடைக்கப்போகின்றன. எனவே, அரிசி இப்போது கிடைக்கும் எட்டவுன்ஸ்தான், பாக்கியெல்லாம் கோதுமைதான்! அமெரிக்கா அனுப்பும் சோளம் தான்! பன்னிரண்டு அவுன்ஸ் வைபவத்தில் இந்த உண்மையை நாம் மறந்துவிடக்கூடாது!

## கிருபளானி கட்சி

பாட்னாவில் கிருபளானி கட்சி தோற்றம் பெற்றுவிட்டது. மக்கள் ஆதரவும், இந்தியப் பத்திரிகைகளின் ஆதரவும் அந்தக் கட்சிக்கு இருப்பதாகவே தெரிகிறது. சில மாகாணங்களில் அந்தக் கட்சி பலமுள்ளதாக விளங்குமென்பதற்குப் போதுமான ஆதாரங்கள் இருக்கின்றன. வங்காளம், ஆந்திரா, உத்தரப்பிரதேசம், பீஹார் முதலிய மாகாணங்களில் புதிய பிரஜா கட்சி தேர்தலில் வெற்றிபெற்றுவிடும் என்று சொல்கிறார்கள். சோஷலிஸ்டுகள் இவர்களோடு தேர்தல் கூட்டுவைக்கச் சம்மதித்திருக்கிறார்கள். பார்வார்டு பிளாக் கட்சிகூட இவர்கள் 'தயவை' நாடும்போல் தெரிகிறது. கம்யூனிஸ்டுகளும் புதுக் கட்சி உதயத்தை 'வரவேற்கிறார்கள்'. இத்தனை வரவேற்பிருந்தும் கிருபளானி கட்சி வெற்றியடையாமல் இருக்கவும் சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. வரையறுக்கப்பட்டுள்ள திட்டங்களை அவர்களுடைய தீர்மானங்களிலோ, அல்லது தலைவர்களின் பேச்சுக்களிலோ காண முடியவில்லை. காங்கிரஸுக்கு எதிர்ப்பாகக் காங்கிரஸுக்குள்ளேயே கிளம்பிய சக்திகள் இப்படியொரு உருவம் பெற்றிருக்கின்றன என்றுதான் இப்போதைக்குக் கூற முடியும். தமிழ்நாட்டிலோ காங்கிரஸில் ஒற்றுமை நிலைநாட்டப்பட்டுவிட்டதென்று தம்பட்டமடித்தார்கள். "காங்கிரஸ் என்பது ஒரு ரயில். அது நெடுகப் போய்க் கொண்டேயிருக்கும். வழியில் யார் இறங்கினாலென்ன அல்லது யார் ஏறினாலென்ன? அதற்கு அதைப்பற்றிக் கவலையே இல்லை'' என்று காமராஜர் தமிழ்நாட்டுக் காங்கிரஸ் ரயிலை ஓட்டிக்கொண்டிருக்கிறார். தேர்தல் கமிட்டியிலிருந்து ராமசாமி ரெட்டியார் விலகிக் கொண்டதாகச் செய்திகள் வந்தன. பூப்போல, ரெட்டியார் ராஜினாமாச் செய்த இடத்திற்கு ஜூலையில் நடக்கும் கூட்டத்தில் வேறொருவர் தேர்ந்தெடுக்கப்படுவார் என்ற செய்தியும் வந்திருக்கிறது. இந்நிலையில் ரெட்டியார் என்ன செய்யப் போகிறார் என்பது யாருக்கும் புரியவில்லை. கிருபளானிக்குள்ள தைரியம், ரெட்டியாருக்கு இல்லையா என்று தமிழ்நாட்டுக் காங்கிரஸ்காரர்கள் ஆச்சரியப்படுவதாகக் கேள்வி. அவருடைய விளக்கமான அறிக்கை வெளிவந்தால் எல்லாம் விளங்கிவிடப் போகிறது!

## சவுக்கடி

தூத்துக்குடித் தோழர் தங்கப்பழத்திற்குச் சிறைவாசம் தந்திருக்கிறார்கள், சென்னை சர்க்கார். "சவுக்கடி" என்ற நூலை எழுதியதற்குத்தான் இந்தத் தண்டனையாம்! பேச்சுரிமை, எழுத்துரிமையைக் காப்பாற்ற டில்லியில் முதலமைச்சர் நேரு முனைகிறார்; இங்கே அவருடைய சீடர்களோ, "புத்தகம் எழுதினாரா? அவரைச் சிறையில் தள்ளிப்பூட்டு'' என்று தர்பார் நடத்துகிறார்கள். நேர்மாறான போக்கு! இந்த விசித்திர நிலைக்கு வரும் தேர்தலாவது முற்றுப்புள்ளி வைக்குமா?

# வெறும்  கலாட்டா 

புதிதாகச் சென்னைக்கு வரப் போகும் என் நண்பர் ஒருவருக்காக வீடு தேட ஆரம்பித்தேன். இல்லாவிட்டால் அந்தப் பொல்லாத நண்பர் என் வீட்டிலேயே குடியேறி விடுவார்போல் இருந்தது. எனவே, இதைப் பற்றி ஒன்றும் யோசிக்காமல் நானே ஒரு அவசரச் சட்டம் நிறைவேற்றி அதனை 'இம்மீடியேட் எபக்டு'க்குக் கொண்டுவந்தேன்! ஆனால் காரியத்தில் இறங்கும் பொழுது தான் கடலுக்குள் இறங்குவது போல் இருந்தது எனக்கு!

எனக்குத் தெரிந்தவர்களிடமெல்லாம் 'என் வீட்டுப்புராண'த்தை விரிக்க ஆரம்பித்தேன்.

"வீடா? குட்டிச்சுவரைப் பார்ப்பதே குதிரைக் கொம்பாயிருக்கிறது. நீர் வீடு என்கிறீரே! உரத்துப் பேசாதேயும் ஓய்!" என்றார் ஒருவர்.

"போங்க ஸார், போன வருஷமே சொல்லியிருந்தீர்களானால் அடுத்த வருஷமாவது நல்ல வீடாகக் கிடைக்கும்! நேற்றுத் தான் தலைவிரிச்சான் சந்திலே ஒரு வீட்டை வலை போட்டுப் பிடிச்சேன்! இது 1949-ல் அட்வான்ஸ் வாங்கின ஆசாமிக்கு!"

புரோக்கர் பொன்னுசாமி இப்படிக் கூறிய பொழுதுதான் வீட்டு நெருக்கடியின் விஷக்கடி எனக்குத் தெரியவந்தது! என் நண்பரோ என்னை விடுவதாயில்லை. கடிதங்கள் மூலம் 'வீடு, வீடு' என்று விரட்டிக்கொண்டிருக்கிறார். அதுவும் நிறைந்த வசதி — குறைந்த வாடகையில்! இப்படிப்பட்ட வீடு எங்கே கிடைக்கப்போகிறது?

"அறம், பொருள், இன்பம், வீடு என்கிறது வேதம்! அந்த வீடு பரந்த வெளியில் இருக்கிறது — இங்கில்லை. இங்குள்ள வீடுகளெல்லாம் வெறும் மேடுகள் — இல்லை சமாதிகள்!" இப்படி ஒரு ஐடியாவை உதிர்த்துத் தள்ளியது வேதாந்தப் பெருச்சாளி.

ஆமாம்! சமாதிக்கும் வீட்டுக்கும் உண்மையில் நெருங்கிய சம்பந்தம் இருக்கத்தான் செய்கிறது. 'சமாதியும் வீடும் ஒன்றுதான்' இப்படி ஒரு எழுத்தாள நண்பர் விளக்கம் கொடுத்தார். வேடிக்கையாக இருக்கிறதல்லவா, உங்களுக்கு? கேளுங்கள்:

சமாதி யென்றால், இறந்தவர்கள் குடியிருக்கும் வீடு. வீடு என்றால் சாகாதவர்கள் குடியிருக்கும் சமாதி. எனவே, சமாதியும் வீடும் சரியென்க!

இந்த விளக்கம் எப்படி?

லட்சக்கணக்காகச் செலவு செய்து ஸோமநாதருக்கு ஒரு சமாதி கட்டிக்கொண்டு வருகிறார்கள்! சமாதியின் பிளான்

பத்திரிகைகளிலெல்லாம் வெளி வந்தது! மூலச் சமாதி முடிந்து ஸோமநாதரை அதில் குடி யேற்றிய வைபவம் கொஞ்ச நாட்களுக்கு முன்புதான் நடந்தது! (அட நாத்திகா, உன் பேனு ஒடிந்துபோக! ஆண்டவன் ஆலயத்தைச் சமாதி யென்று சொல்கிறாய்?) 'சமாதி புகுவிழா' வுக்கு ராஜப்பிரமுகர்களும், ராஷ்டிரபதிகளும் ஆசார பூஷிதர்களாகப் பிரசன்னம் செய்தார்கள்! சோமேசனுக்குப் பிரியமான லட்டுகள் மட்டும் ஐம்பது லட்சம் சமாதிக்குச் சமர்ப்பணம் செய்தார்கள். காய்கறிக் காணிக்கைகளைக் கொட்டி வைப்பதற்கே, பெரிய பெரிய பள்ளத்தாக்குகளை உண்டு பண்ண வேண்டியிருந்ததாம். இந்த வைபவத்திலே பிராமணோத்தமர்கள் வேதங்களைப் பிய்த்து எறிந்துவிட்டார்களாம்! அப்பாடா, ஸோமநாதர் பிழைத்தார்! ஜெய் ஸோமநாத்!

எந்தக் காலத்திலேயோ இடிந்து தூர்ந்து போன சமாதிகளுக்கெல்லாம் சுக்கிர திசை யடிக்கும்பொழுது திருவாளர் ஐயப்பன் மட்டும் சும்மா இருக்க முடியுமா? அல்லது அடியார்கள் தான் சும்மாயிருப்பார்களா? ஸோமநாதரைப் பின்பற்றி ஐயப்பனுக்கும் ஒரு புதிய பங்களா—இல்லை இல்லை—சமாதிதான்—கட்டி முடித்து, அதில் குடியேற்றிவிட்டார்கள். ஐயப்பன் சமாதி விழாவிலும் ஏராளமான லட்டும் பிட்டும் கொட்டியருளி மனம் குளிர்ந்தார்கள். வீட்டை யிழந்து ஊரூராய ஓடேந்தி அலைந்து கொண்டிருந்த ஐயப்பனுக்கு இப்பொழுது நல்ல ஓய்வு!

மறுபடியும் வீட்டுப் பிரச்னைக்கு வருவோமாக! நமது நாட்டுக் கடவுளர்களெல்லாம் தங்கள் வீடுகளைக் காலி செய்து கொடுத்தார்களென்றால், இந்த 'ஹவுஸ் பிராப்ள'த்தைக் குழி தோண்டிப் புதைத்துவிடலாம். ஆனால் ஆண்டவர்கள் அசைந்து கொடுப்பார்களா? அப்படி அசைந்து கொடுக்காவிட்டால் 'ஆண்டவனே, வெளியேறு!'' என்று சாத்வீகமான முறையில் சத்தியாக்கிரகம் செய்யவேண்டும்! (இந்த எட்டவுன்ஸ் ரேஷன் காலத்தில், சாகும் வரை உண்ணு விரதம்கூட இருக்கலாம்!) நமது தெய்வங்களுக்கு ஒரு 'சமாதி' அவசியம் தேவைதான் என்றால் அந்தச் சமாதி, ஒரு சவக் குழியாக இருக்கட்டுமே!

கடைசியாக என் நண்பனுக்கு இப்படி ஒரு கடிதம் எழுதிப் போட்டுவிட்டேன்!

"சிநேகிதா,

நீ சென்னைக்கு வரும்பொழுது, அங்குள்ள வீட்டை அப்படியே பெயர்த்துக்கொண்டு வந்துவிடு! இல்லையென்றால்—நீதான் தியாகி பரம்பரையாயிற்றே—ஐந்து ஏக்கர் வீரமானியத்திற்குப் பதிலாக ஒரு வீடு 'சாங்ஷன்' செய்யுமாறு சட்டசபைக்கு மனுப் போடு!

இப்படிக்கு
உன் தோழன்"

—தில்லாடி




# விடியுமா?

சென்னையில் மட்டுமல்ல, நாட்டின் பல பாகங்களிலும் இப்பொழுது நாடகங்கள் நடிக்கப்படுகின்றன. நாடகங்கள் எழுதுவதிலே எழுத்தாளர்கள் ஊக்கம் காட்டுகின்றனர். நாடகங்களிலே நடித்துப் புகழ் பெற வேண்டுமென்று நண்பர்களும் உற்சாகம் காட்டுகின்றனர். நாடகக் கலை பிழைத்துக்கொண்டு வருகிறது.

சிவலீலா, கந்தலீலா, சீதா கல்யாணம் போன்ற நாடகங்கள்தான் இப்போது செத்துக்கொண்டுவருகின்றன. சீர்திருத்த இயக்கத்தின் சிறந்த பணிகளில் நாடகக் கலையில் ஏற்பட்ட இந்த நல்ல மாற்றம் ஒன்று. இது மக்கள் எண்ணத்தின் அடிப்படையிலேயே மாற்றம் உண்டாக்கியிருக்கிறது. இதன் விளைவுதான், சமூக சீர்திருத்த நாடகங்கள் பலுகிக்கொண்டு வருகின்றன! நாடகப் பெயர்களே புரட்சிகரமாயிருக்கின்றன! இந்தப் பட்டியலைப் பாருங்கள்,

**மனிதன்**
**பெண்**
**முள்ளில் ரோஜா**
**புயல்**
**கைதி**
**காதற் பரிசு**

பெரும்பாலும் இந்த நாடகங்களெல்லாம் தற்போதைய சமுதாயத்திற்குத்தேவையான கருத்துக்களைப் பிரச்சாரமாகக் கொண்டு அந்த அடிப்படையில் எழுதப்பட்டவைதாம்! பிரச்சார நாடகங்களுக்கு எத்துணை உயர்வும் மதிப்பும் வரவேற்பும் இருக்கிறதென்பதைச் சென்ற வாரம் (17–6–51) சென்னை வி. பி. ஹாலில் நடந்த "விடியுமா?" நாடகத்தைப் பார்த்தவர்கள் அறிந்திருப்பர்!

விடியுமா? வாழ்க்கை இருண்ட குகையாகிக்கொண்டு வருகிறது! அறிவொளி அணைந்துவிட்டது. மக்கள் மடமைக் குழியிலே, ஏமாற்றுக் கிடங்கிலே தள்ளப்படுகிறார்கள்! குருட்டு உலகம் கள்ள மார்க்கெட் கொள்ளைக்காரர்களையும், பொழுது போக்குச் சீர்திருத்தம் பேசும் பொய்யர்களையும்தான் கொண்டாடுகிறது. இந்த உலகம் உருப்படுமா? வாழ்க்கை விடியுமா? சிந்தனை அறிவைக் கேட்க, அறிவு வேலை செய்கிறது.

தாமோதரன் ஒரு நாடோடி; வழிப்போக்கன்; ஊர் சுற்றி! ஆனால் காரியவாதி! சிந்தனையாளன். நாட்டின் பல பாகங்களிலும் பணக்காரர்கள் செய்யும் பகட்டை, படாடோபத்தை, பகல் வேடத்தை, 'பம்மாத்து' வேலைகளைக் காண்கிறான். அவை

களை அம்பலப்படுத்துகிறான். கட்டத் துணியின்றி ஏழைகள் கதறிக்கொண்டிருக்கையில் செல்வன் வீட்டு நாயைக் குளிப்பாட்டித் துவட்டுதற்கு 'டர்க்கி டவல்'! பச்சைக் குழந்தைகள் பாலுக்கு அழும்போது கருங்கல்லுத் தெய்வங்களுக்குப் பாலாபிஷேகம்! நாயோடு போராடும் சேய்களுக்கு எச்சில் இலைகளைக்கூட விட்டெறிய மனமில்லாத செல்வனின் கல் நெஞ்சம்! போலிச் சீர்திருத்த வாதிகள்—காதலை வஞ்சித்த ஒரு கயவன்—அவனுக்குத் தாளம் போடும் நண்பர்கள்...... இப்படியாகக் கோணல் உலகத்தின் சேட்டைகளைக் காண்கிறான். "அறிவுக்கு இருட்டு! உண்மைக்கும் உழைப்பின் உரிமைக்கும் இருட்டு! எங்கும் இருள்! பேயிருள்! மனதிலே இருள்! மக்கள் வாழ்விலே இருள்! ஆகவே, நாட்டிலும் வீட்டிலும் இருள்!" சிந்திக்கின்றான். மனம் குமுறுகிறான். வேதனை உள்ளத்திலிருந்து வெடித்துக்கிளம்பிய எதிரொலி தான் 'விடியுமா?' என்பது!

நாடகத்தின் அச்சாணி போன்ற இந்தப் பாத்திரத்தின் மூலமாகத் தோழர் வல்லிக்கண்ணன் தமது எண்ணங்களை வெளிப்படுத்துகிறார். அருமையான கருத்துக்கள்! ஜீப் கார் வேகத்தைப் போல வசனங்கள் சீறி வருகின்றன.

நாடகத்தின் முடிவு நம்மைச் சிந்திக்க வைப்பதாயிருக்கிறது. பாத்திரங்கள் முடிவு பெறாமலேயே தங்கிவிடுகின்றன. விடியுமா என்ற கேள்விக்கு விடை இல்லாமலேயே போய்விடுகின்றது. சூழ்ச்சி, நயவஞ்சகம், ஏமாற்று எல்லாம் நித்தியத்துவம் பெற்றுவிடுகின்றன! இன்றைய உலகத்தை அப்படியே படம் பிடித்துக் காட்டுவது போல் இருக்கிறது முடிவு!

நடிகர்களைப்பற்றி ஒரு வார்த்தை!

இந்த நாடகத்தின் டைரக்ஷனை ஏற்றுக்கொண்ட நண்பர் ஏ. வரதராஜனே முக்கியப் பாத்திரமான தாமோதரனாக வருகிறார். ஆரம்பத்திலிருந்து கடைசி வரை இவரது நடிப்பு போற்றத் தக்கதாயிருந்தாலும், நடுப்பகுதியிலிருந்துவனே இவர் சோர்ந்து போய்விட்டார்! சில விடங்களில் இவர் வசனங்களைக் கூட'மறந்துவிட்டது வருந்தத் தக்கது! அடுத்தபடி காமெடியனாக வரும் நண்பர் எல்லோரது கவனத்தையும் கவர்ந்துவிட்டார்! அடிக்கடி சிரிக்க வைப்பதோடு சிந்தனைக்கும் வேலை கொடுத்துவிடுகிறார்!

மகாராஜாவாக வரும் நண்பர் அவ்வேடத்திற்குப் பொருத்தமே இல்லை. வசனங்களைப் பேசுவதிலே திணறுகிறார்!

புஷ்பாவாக நடிக்கும் தோழியர் முன்னுக்கு வரலாம்! கூச்சமில்லாத நடிப்பு, வசனங்களைத் தெளிவாகச் சொல்லும் திறமை அவருக்கு அளித்துள்ள பாகத்தைச் செம்மையாக முடித்து வைக்கின்றன!

'விடியுமா?' என்று ஆரம்பத்திலும் கடைசியிலும் பாடப்படும் பாடல் ஒன்றுதான் நம் நெஞ்சைத் தொடுகிறது.

— இனியன்

# அவள் மகிழ்ந்தாள்

புதுமை வாணன்

“வென்றுவிட்டேன் தமிழணங்கைக் கவிஞனென்று
வீறுகொண்டேன்! அவள் எனக்கே அடிமையானாள்
பொன்றாத புகழ்பணைக்க உலக மக்கள்
போற்றுகின்றார் என்னெழுத்தை எழில்தா னென்று!
குன்றுநிகர் தனம்படைத்த செல்வரெல்லாம்
குனிந்தெனக்கு நலம் செய்து நடக்கின்றார்கள்
நின்றநிலை தன்னிலே நான் கவிதை நதி
நிலம்செழிக்க அமுத மழை பொழியலாகும்!”...

முடிக்கவில்லை எழுத்ததனை என் மனைவி
முதுகிற்குப் பின்நின்று சிரித்துச் சொன்னாள்:
“அடித்தளத்தில் பலமில்லை; அரிசி வாங்கி
அடுப்பேற்ற வகையில்லை; அழும் பிள்ளைக்குப்
பிடியென்று தரவும் ஒரு சல்லியில்லை
பீத்தலிடைத் துணி இந்தநிலை இருந்தும்
குடிவெறியில் துள்ளுகின்ற மனிதனை போலக்
கோத்துவிட்டீர் வார்த்தைதனை அர்த்தம் உண்டா?

“தமிழணங்கை வென்றதனால் உலக மக்கள்
சரியான கவிஞனெனச் சொன்னதாலே
அமிழ்தன்ன மொழியவிழ்க்கும் நம் குழந்தை
அரும்பசிக்கே உணவாச்சா? அஃதோ அந்தச்
சிமிழியிலே எண்ணெயில்லை திரியும் தீய்ந்து
நிறுத்துவிட்ட ஒளிதுலங்க வழிதா னுண்டோ?
கமழ்மறாத் தென்றலிலே கானம ஒச்சி
கவிபாடிக் களித்திருத்தல் நன்று, நன்று!”

என்றுசொல்லி ஏடெடுத்துக் கிழித்துப் போட்டாள்!
எல்லையிலாக் கோபமெனக் கிருந்த தென்ன?

ஒன்றேனும் பொய்யில்லை; அவளின் வார்த்தை
உளம்நொந்த சோகத்தின் வெட்டுயிர்ப்பு!
மன்றல்தனில் எனைமணந்தாள் வாழ்க்கை தன்னில்
வற்றாத வறுமைதனைக் கட்டிக் கொண்டாள்.
குன்றிமணி எடையுள்ள தாலி தன்னைக்
கோத்திருக்கும் கயிறின்றி வேறே இல்லை.

என்னநலம் தனைக்கண்டாள் என்றால் பேதை?
இந்நிலை இருந்தும்பல பிள்ளை பெற்றாள்!
கன்னல்மொழி பேசுகின்ற மக்கள் கூடிக்
கண்கள்பிஞ்சர் தழுகையிலே ஏடெடுத்து
மண்ணுலகம் உய்யப்பல வழிகள் சொல்லி
மரத்தமிழில் கவிபாடிக் களித்திருந்தேன்!
சின்னவிழி தேனதரம் தெவிட்டா மேனிச்
செய்வாழ நான்கண்ட தொன்று மில்லை!

"பாழ்உலகே" எனச் சபித்தேன்! என் பக்கத்தே
படுத்திருந்த என்பிள்ளை பசிக் கொதிப்பில்
"கூழ்அம்மா கூழெ"ன்றான்; கவிகள் பாடும்
கூர்ப்'பேனா' தனைமுறித்தேன். "இன்று தொட்டுக்
கேள்பெண்ணே நான் உழவன்; கீர்த்தி வெல்க!
கிழித்தெறிந்தாய் ஏடுதனை, நீ உழத்தி!
பாழ்படுத்தும் கவிதையினி எமக்கு வேண்டாம்!
பார்உழுவோம்" எனச்சொன்னேன்; அவள் மகிழ்ந்தாள்!



# பேராசை

கலைமணி

## காட்சி. 1

[பெருமழைக்குப் பின் 'பிசுபிசு'வென்று தூறிக்கொண்டிருந்தது. வானம் இன்னும் மப்பும் மந்தாரமுமாகவே இருந்தது. ஆனால் சற்று நேரத்துக்கு முன் இருந்த புயலின் வேகம் இப்போது இல்லை. வானம் வெளுப்பதற்கான அறிகுறிகள் தென்பட்டன, சுதர்சனின் மனைவி சுகந்தி மன அமைதி இல்லாதவள் போல் வீட்டினுள் போவதும் வாயில் பக்கம் வருவதுமாக நடந்து கொண்டிருந்தாள்.]

சுகந்தி :—அப்பப்பா......என்ன மழை...சே! ஏன் இப்படி ஓரேயடியாகக் கொட்டுகிறது?

[இதற்குள் அவளுடைய ஆறு வயது நிர்மலா ஓடிச்சென்று வீட்டு வாசலில் ஓட்டுக் கூரையிலிருந்து விழும் மழைத் தண்ணீரைத் தன் சிறு கையால் பிடித்து விளையாடுகிறாள்.]

சுகந்தி :—(தன் குழந்தையின் குறும்பு கண்டு) நிர்மல்! என்ன செய்கிறாய் அங்கே? இங்கே வா?

நிர்மலா :—அம்மா !......இங்கே பாரும்மா வெள்ளம் ஓடுது...

சுகந்தி :—முதலில் இங்கே வா நீ! மழையில் நனைந்தால் காய்ச்சல் வரும்.

நிர் :—போம்மா நான் கப்பல் செய்து விடப்போறேன்...

சுகந்தி :—கண்ணல்ல, இங்கே வாம்மா...

நிர்:—அம்மா...அப்பா எங்கே?

சுகந்தி:—வெளியே போனார்... இன்னும் காணோம். இந்த மழையில் என்ன சேர்க் தோ!...உம்...

நிர்:—அம்மா! அப்பா எனக்குப் பூப்பறிச்சு வருவாரல்லவா?

சுகந்தி:—உம்... இந்த மழையில் எங்கு கிடைக்கப் போகிறது?

[திடீரென்று பேரிடி முழங்குகிறது. நிர்மலா ஓடிப் போய்த் தாயை அணைத்துக் கொள்கிறாள். அதே சமயம் சுதர்சன் மழையில் நனைந்த வாறே கையில் ஒரு தாமரைப் பூவுடன் உள்ளே நுழைகிறான்.]

நிர்:—அப்பா! இந்நேரம் எங்கே போயிருந்தே?

சுதர்சன் :—உம்.......(மழையில் நனைந்த வேட்டியைப் பிழிகிறான்.)

சுகந்தி:—இந்த அடைமழையில் கூடவா நதித்துறைப் பொய்கைக்குப் போயிருந்தீர்?

சுதர்:—உம்! போகாமல்... இந்தா இந்த வேட்டியைக் கொடியில் உலர்த்து! வேறு உடை கொண்டுவா! (கொடுக்கிறான்)

சுகந்தி:—நீங்கள் வரவில்லையே... என்னமோ, ஏதோ என்று கவலைப்பட்டுக் கொண்டிருந்தேன்.

சுதர் :—கவலைப்பட்டால் ஆய் விடுமா?......போனதால்தான் இந்த ஒரு பூவாவது கிடைத்தது.

நிர் :—அப்பா! எனக்குக் கொடப்பா அந்தப் பூவை. நான் விளையாடப் போறேன்.

சுதர்:—ச்சூ, பேசாமலிரு! இது விளையாடுவதுக்கல்ல.

நிர் :—உம்...எனக்குத்தான் வேணும். ஊ...ஊ...ஊ...

சுதர் :—சனி, அழ ஆரம்பித்து விட்டாயா? வாயைத் திறந்தா வாய் மேலே இரண்டு போடுவேன்.

நீர்:—உம்...உம் எனக்குப் பூ வேணும். உம்...உம்!

சுதர்:—சீ! நீ மகாராஜா பெண்ணல்லவா? உனக்கு அதிகாலையிலேயே பூ வேணும்!

[இரண்டு போடுகிறான். குழந்தை அழுகிறது. உள்ளேயிருந்து சுகந்தி வந்து குழந்தையைத் தூக்கிக் கொண்டு]

சுகந்தி:—ஏன் குழந்தையை இப்படி அடிக்கிறீர்கள்?...என் செல்லம் அழாதே கண்ணு!

சுதர்:—இல்லே...இந்தப் பூ வேணுமாம்.

சுகந்தி:—குழந்தைக்குக் கொடுத்தாத்தான் என்னவாம்?

சுதர்:—ஆமாம். நான் என்னமோ ஒன்றாவது கிடைச்சுதே...இதை விற்று, அதுவும் அரசனிடம் கொண்டு போய் விற்று ஏதாவது சம்பாதிக்கலாம் என்று கொண்டு வந்தா, அதைக் கொண்டு போய் உன் செல்வத்துக்குக் கொடுக்கணுமாக்கும்.

சுகந்தி:—அதென்ன என் செல்வம்? அந்தச் செல்வத்தில் உங்களுக்கும் பங்கில்லையா? (சிரிக்கிறாள்)

சுதர்:—போதும் உன் கொஞ்சல்: எனக்குச் சாதம் போடு, நான் சீக்கிரம் போகணும்!

சுகந்தி:—ஐயோ, இந்தப் பூவை விற்றுத்தான் உங்களுக்கு இன்றையப் பொழுது போக வேண்டுமாக்கும். குழந்தையுள்ளம் கேட்கிறது. அதற்குத் தந்தையுள்ளம் மறுக்கிறதே!

சுதர்:—அதற்குத் தாயுள்ளம் சிபாரிசு செய்கிறதாக்கும். அறிவுகெட்ட பெண்ணே, தினம் ஏதாவது சிறு தொகையாவது சம்பாதிக்காது விட்டால் நாம் வாழ முடியுமாடி? இதோ பார்! இன்று மழையினால் எல்லாப் பூக்களும் நாசமடைந்து விட்டன. இது ஒன்றுதான் மிஞ்சியது. எப்படியும் புத்தரின் பாத கமலங்களுக்குச் சமர்ப்பிக்க மன்னனுக்கு ஒரு பூவாவது தேவைப்படும். அதை நான் கொண்டு சென்றால், விலை பவுன் ‘கணக்கில்’ கூடப் பேசலாம்.

சுகந்தி:—ஏனோ இந்தப் பேராசை உங்களுக்கு! அன்புக் கடவுளின் தாளில் சமர்ப்பிக்கும் பூவுக்கு அதிக விலை பெறலாம் என்று எண்ணுகிறீர்கள்... இத்தனை செல்வத்தோடு மேலும் செல்வம் சேர்த்து நாம் என்ன செய்யப் போகிறோம்?

சுதர்:—போ, போ! நீ பெண்தானே......நான் சாப்பிட்டு விட்டு உடனே செல்ல வேண்டும்.

சுகந்தி:—நல்ல பணமும் நீங்களும். உம்...

[உள்ளே போகிறாள். சுதர்சன் பின் தொடர்கிறான்.]

## காட்சி. 2

[அரண்மனை வாயில்: சுதர்சன் தன் கையில் பூவோடு செல்கிறான். அப்போது வழிப்போக்கன் ஒருவன் குறுக்கிட்[illegible]]

அட்டைப்படக் கதை

வழிப்போக்கன் :—யாரப்பா அங்கே? ஏ பூக்காரா!...

சுதர்:—(நின்று) யார்?......என்னய்யா! ஏன் கூப்பிட்டீர்?

வழிப் :—உம்! அந்தப் பூவை விற்கத்தானே கொண்டு செல்கிறாய்?

சுதர்:—ஆமாம். ஏன் உங்களுக்கு வேண்டுமா?

வழிப்:—வேண்டும்தான். ஒரு விலை சொல், வாங்கிக் கொள்கிறேன்.

சுதர்:—இன்று அடைமழை...

வழிப்:—நன்றாகத் தெரியும்.

சுதர்:—புயல்கூட அடித்தது.

வழிப்:—ஆமாம். இரவு நடுநிசியிலிருந்து விடாது அடித்தது...

சுதர்:—வெளியே மரங்களெல்லாம் கூட முறிந்து விழுந்துவிட்டன.

வழிப்:—நல்லது. நானே வழியில் அதைப் பார்த்தேன். அதைப்பற்றி என்ன?

சுதர்:—நதி, மடு, குளம் எல்லாம் வெள்ளப் பெருக்காடியிருக்கின்றன.

வழிப்:—மிகவும் சரி. நான் பூத்தான் விலை கேட்கிறேன். இந்த வர்ணனை ஏன்?

சுதர் :—அதற்காகத்தான் கூறுகிறேன், சற்றுப் பொறும். மேற்படி மழையின் விளைவால் பொய்கையில் பூத்த தாமரையெல்லாம் அழிந்துவிட்டன. இது ஒன்றேதான் தப்பித் தவறிக் கிடைத்தது.

வழிப்:—ஆண்டவன் திருவுள்ளம் அது. அண்ணல் புத்தரின் பொன்னடியைத் தீண்ட இது ஒன்றுதான் இன்று பாக்கியம் செய்தது போலும்!

சுதர் :—ஆகவேதான் இதன் விலையை அதிகப்படுத்தியுள்ளேன்.

வழிப்:—பரவாயில்லை. அப்படி என்ன அதிக விலை கேட்டுவிடப் போகிறாய்?

சுதர் :—அப்படி ஒன்றுமில்லை. ஒரு பவுன்தான் இதன் விலை.

வழிப்:—ஹா! ஒரு பவுனா?

சுதர்:—ஆமாம். இரவு பெய்த மழையையும், புயலையும் நீங்கள் நினைவுபடுத்திக் கொள்ள வேண்டும்.

வழிப் :—நாசமாய்ப் போச்சுப் போ. ஒரு பூவுக்கு விலை ஒரு பவுனா?

சுதர்:—ஏன் சாபக்கேடான வார்த்தைகள் போடுகிறீர்கள்? இன்று நீங்கள் இதைத் தவிர வேறு பூப் பெறமுடியாது.

வழிப்:—அதற்காக...

சுதர்:—அதற்காக அதிக விலைதான் கொடுக்க வேண்டும்.

வழிப்:—புத்தனுடைய பாதகமலங்களுக்குச் சமர்ப்பிக்க இத்





தனை அநியாய விலை கொடுத்தா வாங்குவது?

சுதர்:—அப்படி வாங்கிச் சமர்ப்பிப்பதில்தான் உன் அந்தரங்க பக்தியின் ஆழம் வெளிப்படும்.

வழிப்:—மெய்தானா?

சுதர்:—சந்தேகமில்லை.

வழிப்:—நல்லது. இந்தாரும் ஒரு பவுன். பூவினைத் தாருங்கள்.

[இத்தனை நேரம் தள்ளி இருந்து இந்த பேரத்தைக் கவனித்துக் கொண்டிருந்த அரசன், சுதர்சன் அருகில் வருகிறான். மன்னனைக் கண்ட இருவரும் மரியாதை செய்கின்றனர்.]

மன்னன்:—அப்பனே! எனக்கு இந்தப் பூ வேணும். அவன் கொடுக்கும் தொகையை விட அதிக தொகை தருகிறேன்.

சுதர்:—அப்படியா அரசே! அட்டியின்றித் தருகிறேன்.

மன்:—சரி, என்ன விலை கேட்கிறாய்?

சுதர்:—பாருங்கள், அவன் சாதாரண மனிதன். தாங்களோ இந்நாட்டு அரசர். அவன் இந்தப் பூவுக்கு ஒரு பவுன் கொடுக்க முன் வரும்போது தாங்கள்...

மன்:—நான்தான் முன்னமேயே கூறினேனே அதிக விலை தருகிறேன் என்று. கேள், எவ்வளவு வேண்டும்?

சுதர்:—அப்படியொன்றும் அதிகமில்லை. அவன் தகுதிக்கும், தங்கள் தகுதிக்கும் எடைபோட்டுப் பார்த்ததில் தாங்கள் பத்துப் பவுன் இதற்குத் தாராளமாகக் கொடுக்கலாம் என்பதே என் கருத்து.

மன்:—பத்துப் பவுன்தானே. இந்தா!...பூவைக் கொடு. கொண்டுபோய்ப் புத்தரின் திருவடியில் சீக்கிரம் சாத்த வேண்டும்.

வழிப்:—(இடையில் குறுக்கிட்டு) ஏய்! நான்தான் முதலில் பூவினை விலை கேட்டேன். நீ எனக்கேதான் தரவேண்டும்.

சுதர்:—என்ன, உனக்கே தர வேண்டுமா? அட்டியில்லை. ஆனால், அதிக விலைக்கே என் பூத் தரப்படும்.

வழிப்:—நல்லது. நான் இருபது பவுன் தருகிறேன்.

மன்:—நான் முப்பது பவுன்.

வழிப்:—நான் ஐம்பது.

மன்:—நான் நூறு.

வழிப்:—நான் நூற்றைம்பது.

சுதர்:—பலே, பலே! நான் இன்று நரி முகத்தில்தான் விழித்தேன்!

மன்:—நான் என் நாட்டையே தருகிறேன். பூவை எனக்கே கொடு. நான் அதை இன்று அண்ணல் புத்தர்பிரானின் திருவடிகளில் வைத்து மகிழ வேண்டும்.



[சுதர்சனுக்கு ஒன்றும் புரியவில்லை. விடுவிடென்று அந்த இடத்தை விட்டு ஒரே ஓட்டமாய் ஓடுகிறான். அவன் பூவைக் கொடுக்காது ஓடுவதைக் கண்டு இருவரும் திகைத்து நிற்கின்றனர்.]

### காட்சி. 3

[ஒரு மரத்தடி. அங்கே வந்து சுதர்சன் நிற்கிறான். அவனுக்குப் பெருமூச்சு வாங்குகிறது. தன் கையிலிருந்த பூவை மிருதுவாகத் தடவுகிறான். ஆர்வம ததும்பப் பார்க்கிறான். அவன் மனம் பேசுகிறது.]

மனம்:—என்ன? காலணாப் பெறாத இந்தத் தாமரைப் பூவுக்கு இத்தனை விலையா? நாட்டையே தருகிறேன் என்றானே மன்னன். அப்படியானால் இதன் மதிப்பு! இன்னும் அதிகமாகத்தான் இருக்கவேண்டும். இத்தனை விலை கொடுத்து வாங்கிப் புத்தர்பிரானின் பாதங்களில் சாற்றுவதால் என்ன அடைவார்கள் அவர்கள்? அந்தப் பலனுக்காக நாட்டையும் இழக்கத் துணிகிறான் என்றால்.... நல்லது. இதை நாமே புத்தரிடம் கொடுத்து இதை



விட லாபம் பெறலாமல்லவா? ஒருக்கால் உலகத்தையே அவர் தந்தாலும் தரலாம். ஏன் வலியவரும் வாய்ப்பை இழக்கவேண்டும்!

[எழுந்து ஓடுகிறான்]

### காட்சி. 4

[ஒரு அழகிய மாந்தோப்பு. அதனுள் ஒரே ஒரு பெரிய புன்னை மரம். அதன்கீழ் பரிசுத்தமான ஒரு வட்ட வடிவமான மேடை. அதன்மேல் சாந்தம் தவழ வீற்றிருக்கும் புத்தர். அவரைச் சுற்றிலும் நறுமணம் கமழும் குளிர்காற்று. நல்ல அமைதி. மௌன நிலை. கண்கள் தூங்கும் மீன்களைப் போல் இமைகளால் மூடியிருக்கின்றன. சுதர்சன் ஓடி வந்து கையிலிருந்த மலரை அவரின் திருவடிகளில் வைத்து, கைகளை எடுத்துக் கண்களில் ஒற்றிக் கொண்டு கீழே விழுந்து வணங்குகிறான். புத்தர் இலேசாகக் கண்களைத் திறந்து புன்சிரிப்புத் தவழச் சுதர்சனை நோக்கி]

புத்தர்:— குழந்தாய்! என்ன வேண்டும்?

சுதர்:—சுவாமி, தங்களின் அன்பும், அருளும், பாதமலரின் ஸ்பரிசமுமே எனக்குப் போதும்.

புத்:—(கலகலவென்று சிரித்து) வேறொன்றும் வேண்டாமா?

சுதர்:—தங்கள் பாதத்துளியை விட என்ன வேண்டும்? அது போதும் எனக்கு.

புத்:—உண்மையாகவா?

சுதர்:—ஆம், பிரபு. தங்கள்மீது ஆணையாக......

புத்:—நல்லது.

சுதர்:—நான் வருகிறேன் சுவாமி. (போகிறான்)

சுத்:—குழந்தாய், இங்கே வா! (கீழேகிடந்தமலரைக் கையில் எடுத்துக் கொடுத்து) இது, இப்போது என்னுடைய பொருள். உன்னையே விலை கொடுத்து நான் இதை வாங்கியிருக்கிறேன். ஆனாலும் இது என் பாதங்களில் கிடப்பதை விட உன் குழந்தையின் கரங்களில் இருந்தால் இதன் மதிப்பு உயரும். போ! எடுத்துப் போ! என் அன்பளிப்பாக அந்தச் சின்னஞ் சிறு குழந்தையிடம் கொடுத்து என் ஆசியையும் அதற்கு அளி!

[மறுபடியும் மௌனம். சுதர்சன் திரும்பிப் பூவுடன் நடக்கிறான்.]

## காட்சி. 5

[சுதர்சன் வீடு: சுகந்தியின் இடுப்பிலிருக்கும் குழந்தை தகப்பனை நோக்கித் தாவுகிறது.]

சுகந்தி:—ஏன் திரும்பிவிட்டீர்கள்? பூவிற்பனையாகவில்லையா?

சுதர்:—(சோர்வுடன்) என் பேராசையால் இந்தப் பூ புத்தரின் பொன்னடியில் கிடக்கும் பாக்கியத்தை இழந்து விட்டது.

[மலரைத் தன் குழந்தை கையில் கொடுத்து அதன் அழகிய வாயில் ஒரு முத்தமளிக்கிறான்.]

—(காட்சி மறைகிறது)—


## தம்பி தங்கைகளுக்கு

## நல்ல கதைப் புத்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| இரு கதைகள் | நாரா நாச்சியப்பன் | 0 | 4 | 0 |
| சவுக்கடி தர்பார் | ,, | 0 | 6 | 0 |
| குமரித் தீவு | ,, | 0 | 2 | 0 |
| மணி அடித்தது | நவீனன் | 0 | 4 | 0 |
| சினிமாவில் ரங்கன் | கலைமணி | 0 | 2 | 0 |
| சந்தனத்தேவன் | தங்கமணி | 0 | 2 | 0 |
| சாரநாத் | அருவி | 0 | 2 | 0 |
| சாம்பு | வளர்மதி | 0 | 2 | 0 |

**பொன்னி லிமிடெட் — சென்னை 21**

# நாயின் உதவி

இன்பராஜ்

மாலை ஐந்து மணி. பள்ளிக்கூடத்திலிருந்து திரும்பிய மணி சிற்றுண்டி சாப்பிட்டுவிட்டுத் தெருவிற்கு ஓடிவந்தான். அதற்குள்ளாக வீடுகளுக்குச் சென்று திரும்பிய அவனுடைய நண்பர்கள் கோபு, சுந்தரம், ராமு அவனுக்காக அங்கு காத்திருந்தனர்.

மணி சட்டைப் பையிலிருந்து ஒரு பந்தை எடுத்து வெளியே போட்டான். நால்வரும் பந்து விளையாட ஆரம்பித்தனர். அரை மணி நேரம் சளைக்காமல் பந்தாடினர்.

கோபு பந்தையடித்தான். பந்து மணிக்கு முன்னால் உருண்டு வந்தது. மணி வேகமாகப் பந்தை உதைத்தான். பந்து சாக்கடையில் விழுந்தது.

சாக்கடை மிகவும் தாழ்வாக இருந்தது. அதில் சகதி அதிகமாக இருந்ததால் பந்தைக் கையினால் எடுக்க முடியவில்லை. மணி ஒரு குச்சியினால் அதை எடுக்க முயன்றான். பந்து விலகிச் சென்றது. கைக்கு எட்டவில்லை.

பந்தை எப்படி எடுப்பதென்று மணி யோசித்துக் கொண்டிருந்தான். அந்தச் சமயம் ஒரு நாய் சாக்கடையில் குதித்தது. பந்தை வாயினால் கவ்விக்கொண்டு மேலேறியது. மணிக்கு முன்னால் பந்தை வைத்துவிட்டு வாலை ஆட்டியது.

மணிக்கு ஒரே ஆனந்தம். நாயைப் பார்த்தான். நல்ல ஜாதி நாய். ஆனால் சரியான கவனிப்பின்றி ஒட்டிய உடலுடன் விகாரமாகக் காணப்பட்டது.

மணி பந்தை உருட்டிக்கொண்டு வீட்டிற்குச் சென்றான். நாயும் அவனைப் பின் தொடர்ந்தது. பந்தைக் குழாயில் கழுவினான். ஒரு பாத்திரத்தில் தண்ணீர் எடுத்து வந்து நாயின் கால்களைச் சேறு போகக் கழுவினான்.



மணி, நாயுடன் வீட்டிற்குள் சென்றான். அம்மாவிடம் ஒரு ரொட்டி வாங்கி அதற்குக் கொடுத்தான். நாய் ரொட்டியை ஆவலுடன் தின்றது. மணி அதனுடன் விளையாடிக்

கொண்டிருந்தான்.

இரவு எட்டு மணி. மணியின் அப்பா வீட்டிற்கு வந்தார். அவர்ஒருபெரிய பாங்கியின் மானேஜர். மணியின் அறைக்குச் சென்றார். அவனை அங்கு காணவில்லை. "மணி, மணி" என்றுகூப்பிட்டார். மணி நாயுடன் தோட்டத்திலிருந்து ஓடிவந்தான்.



"அப்பா, இது நல்ல நாய். இதை நான் வளர்க்கட்டுமா?" என்றான் மணி;

"ஏண்டா இவ்வளவு நேரமாக இதனுடனா விளையாடிக் கொண்டிருக்கிறாய்? படிப்பு என்னவது?" என்று சொல்லிவிட்டு "முருகா, முருகா!" என்று கத்தினார். வேலைக்காரன் முருகன் ஓடிவந்தான். "இந்தநாயைக் கொண்டுபோய் தூரத்தில் விட்டுவா?" என்று அவனிடம் சொல்லிவிட்டு, மணியைப் பார்த்து, "நீ போய்ப் பாடத்தைப் படி" என்றார். மணி மிகவும் வருத்தத்துடன் அறைக்குச் சென்றான்.

இரவு இரண்டு மணி. தோட்டத்தில் நாய் பயங்கரமாகக் குரைக்கும் சப்தம் கேட்டது. மணியின் அப்பா விழித்துக் கொண்டார். "சனியன் பிடித்த நாய் மறுபடியும் வந்திருக்கிறது" என்று சொல்லிக்கொண்டு எழுந்தார். கைவிளக்கையும் கைத்தடியையும் எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குச் சென்றார்.

கைவிளக்கின் வெளிச்சம் தோட்டச் சுவரில் விழுந்தது. சுவரின்மேல் கருப்புச் சால்வையைப் போர்த்திக்கொண்டு ஒருவன் உட்கார்ந்திருந்தான். அவன் தோட்டத்திற்குள் இறங்காதவாறு நாய் கீழே இருந்து குரைத்துக் கொண்டிருந்தது. இந்தக் காட்சியைக் கண்ட மணியின் அப்பா திடுக்கிட்டார். ஆம்; சுவரின்மேல் திருடன்! வெளிச்சத்தைக் கண்டதிருடன்உடனேவெளியேகுதித்து ஓடிவிட்டான். நாயின் சப்தத்தைக்கேட்டு, முருகன், மணி, அவன் அம்மா எல்லோரும் தோட்டத்திற்கு வந்துவிட்டனர். மணியின் அப்பா நடந்த சம்பவங்களைச் சொல்லி, நன்றியுணர்ச்சியுடன் நாயைத் தடவிக்கொடுத்தார். நாய் மட்டும் இல்லாதிருந்தால் மறுநாள் அவர் பாங்கிக்குக் கொண்டுபோக வேண்டிய இருபதினாயிரம் ரூபாய் களவு போயிருக்கும். அவர் அந்த நாயை வளர்க்கும்படி மணியிடம் சொன்னார்! மணி மகிழ்ச்சியில் குதித்தான்.

மறுநாள் மணியின் அப்பா பாங்கியிலிருந்து திரும்பும்பொழுது மணிக்கு ஒரு சாக்லேட் டப்பாவும், நாய்க்கு ஒரு அழகான கழுத்துப் பட்டையும் வாங்கி வந்தார்.



## நீந்தும் குழந்தைகள்

காண்டன் நகரிலுள்ள குழந்தைகள் நடக்கப் பழகுவதற்குமுன் நீந்த ஆரம்பித்துவிடுகின்றனர்.

சைனாவிலுள்ள காண்டன் பிரதேசத்தில் ஜனத்தொகை அதிகம். சுமார் பத்து லட்சம் ஜனங்கள் வீடுகளின்றிப் படகுகளில் வாழ்கின்றனர். படகில் பிறந்து, படகில் வளர்ந்து, படகில் இறப்பது அங்கு சர்வ சாதாரணமாக இருக்கிறது. ஜனங்கள் படகுகளில் வாழ்வதால் அவர்களுடைய குழந்தைகள் அதிக தூரம் நடப்பதற்கு அவசியம் உண்டாவதில்லை. மேலும் படகைச் சுற்றிலும் தண்ணீரிருப்பதால் தண்ணீரிலிருந்து தங்களைக் காப்பாற்றிக்கொள்ள வேண்டியதிருக்கிறது. இதனால் பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு முதலில் நீந்தக் கற்றுக் கொடுத்து விடுகின்றனர். பிறகுதான் குழந்தைகள் நடக்கப் பழகுகின்றனர்.

## சிரிக்க வேண்டுமா?

**இன்ஸ்பெக்டர்:—** (ஒரு பையனைப் பார்த்து) தம்பி, யாத்திரீகர் என்றால் யார்?

**பையன்:—** பல இடங்களுக்குப் பிரயாணம் செய்பவர்கள்.

**இன்ஸ்பெக்டர்:—** நான் கூட ஊர் ஊராகப் போய்க் கொண்டே இருக்கிறேனே. நானும் யாத்திரீகனா?

**பையன்:—** இல்லை சார், யாத்திரீகர்கள் நல்ல குணமும் தெய்வ பக்தியுமுள்ளவர்கள்.

0 0 0

**ஆசிரியர்:—** மனிதருக்குக் கடைசியில் முளைக்கும் பல் எது?

**பையன்:—** தங்கப் பல், சார்.



## குதிரைப் பிச்சைக்காரர்கள்

பாம்பாஸ் பிரதேசத்திலுள்ள பிச்சைக்காரர்கள் வீட்டுக்கு வீடு குதிரைகளில் சென்று பிச்சை வாங்குகின்றனர். இப்பிரதேசத்தில் ஏழு லட்சம் குதிரைகளுக்கு மேல் இருப்பதால் பிச்சைக்காரர்களுக்குக்கூட ஒவ்வொரு குதிரை கிடைத்திருக்கிறது.

# தமிழ் விருந்து

"தமிழ்த்தும்பி"

## 6. "முல்லையே மலர்வாயோ?"

**சொ**ல்லின் செல்வரான ஒரு செந்தமிழ்ப் புலவர் சோலை ஒன்றினுள் புகுந்தார். சோழ நாட்டு வளப்ப மிக்க சோலைகளிலே அவர் நுழைந்த சோலையும் ஒன்று. அந்தக் காவினில் பல்வேறு மலர் வகைகள் பூத்துக் குலுங்கின. மயக்கம் தரும் மணம் கொண்ட மல்லிகை, மலர்களின் அரசி போன்ற ரோஜா, நல்ல செண்பகம், அழகு முல்லை, சாமந்தி...இன்னும் பலப்பல பூ வகைகள். சுற்றி வீசின தென்றல்கூட மலர் வாடையால் சுகந்தம் பெற்றது. புலவர் கற்பனைக்கு அப்பூங்காவில் நிறைய வேலை இருந்தது. சோழ நாட்டு இன்பமே அந்தச் சிரிக்கும் சிங்காரப் பூக்களில் திகழ்ந்தது.

முல்லைச் சிரிப்பு மடவரல்கள் புன்னகையிலே ஒளிர்ந்தது. கொள்ளை கொள்ளையாகப் பூத்துக் கிடந்த முல்லை பலதிறப்பட்ட மாலைகளாக அழகுத்திறன் அறிந்த மங்கைகளால் கட்டப்பட்டது. அவற்றைச் சூட அவரவர் காதலர்கள் ஒருவரையொருவர் முந்திக்கொண்டு விரைந்தனர். இளைய பருவம் கொண்ட எல்லோரும் மாலை சூடுவதில் மகிழ்ச்சி கொண்டனர்; வளையணிந்த மென்கையர் பலர் இன்னும் பூக்களைக் கொய்து கொண்டிருந்தனர். யாழ் இசையைச் சுகந்தத் தென்றலில் பரப்பும் பாணர் யாழுக்கும் தமக்குமாக மாலை அணிந்து கொண்டனர். பாடினிகள் அநேகர் மாலை கட்ட மலர் கிடைக்குமா என ஐயுற்றனர்.

அநேகமாக எல்லோர் கழுத்திலும் முல்லை மாலை வட்டமிட்டது. மகிழ்ச்சியில் சூடினவர் ஆட, மாலையும் அதற்கேற்ப அசைந்தது. ஆடலழகிகளின் சங்கு வெண்மைக் கழுத்திலே முல்லை மாலை நாட்டியமாடிற்று. காதலர் ஜோடிகளில் காதலியானவள் காதலன் கழுத்தைச் சுற்றின மாலை தன்னுடையது என்றாள்; காதலன் காதலியின் கழுத்து மாலை தன்னுடையது என்றான். ஒருவர் மாலையைச் சூட மற்றவர் மாலையைப் பற்றி யிழுத்தனர். இருவர் அன்புப் பெருக்கில் அகப்பட்டுக்கொண்ட மாலை தவியாய்த் தவித்தது! நம் புலவர் உள்ளத்தில் மகிழ்ச்சி கரைபுரண்டது! இன்ப வெறி அவர் சிந்தையை அலைக்கழித்தது!

'வாழ்க சோழன்!' என்று வாழ்த்திற்று அவர் இனிய கம்பீரக் குரல். 'இன்பம் நிறைந்த நாடு சோழனுடையது! பொன்னி வள நாடு என்றும் இன்ப முடைத்து!' என்று புலவர் வாய்விட்டுச் சொன்னார்.

●

சோழ நாடு ஆட்சி வசதிக்காக அநேக பகுதிகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. அவற்றுள் ஒன்று கோனாடு என்னும் பகுதி. கோனாட்டின் சிறப்பு மிக்க ஊர் ஒல்லையூர். இப்போது ஒலியமங்கலம் என்று வழங்கும் ஊர் முன் கால ஒல்லையூராக இருக்கலாம் என்று நம்ப இடமிருக்கிறது. அதனை ஒல்லையூர்க்கிழான் என்பவர் ஆண்டு வந்தார். அவருக்கு ஒரு ஆசை மகன். பெயர் பெருஞ்சாத்தன் என்பது. நாடு இன்பம் கொழிக்கும் வகையில் தந்தையும் மகனும் ஆண்டனர்.

ஒல்லையூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தன் ஆண்டு வந்த போதுதான் முன் விவரித்த சோலைக் காட்சிகளை வியந்து புகழ்ந்தார் அந்தப் புலவர். அவர் பெயர் குடவாயில் கீரத்தனார் என்பது. குடவாயில் என்பதும் சோழ நாட்டில் இருந்த ஒரு ஊர். அங்கே பிறந்த கீரத்தனார்தான் இலக்கியத்தில் குடவாயில் கீரத்தனார் எனக் குறிக்கப்படுகிறார்.

அந்தக் காலங்களில் தீந்தமிழ்ப் புலவர் குழாம் மன்னர் கூட்டத்தால் ஆதரிக்கப்பெற்றது. கல்விக்கும், புலமைக்கும் தந்த உயர்வை வேறு எந்தப் பொருளுக்கும் மன்னரும், செல்வரும், மக்களும் தரவில்லை. மொழி நலனுக்கும் மொழி வளர்ச்சிக்கும் ஆக்கம் தந்தனர் அவர்கள். அந்த வகையிலே கீரத்தனார் பெருஞ்சாத்தனாரால் ஆதரிக்கப் பெற்றார்.

ஆண்மைக்கு உரிய வீரத்துக்குப் பெயர் போனவன் ஒல்லையூர்க்கிழான் மகன் பெருஞ்சாத்தன். பெருவீரனென்று அவன் புலவர்களால் பாராட்டப்பட்டான். வாழ்வின்பங்களை மக்கள் நுகர்ந்து இன்பம் பெறப் பெருஞ்சாத்தன் பாடுபட்டான். மக்களாலும் வாழ்த்தப்பட்டான். அவனுடைய பொற்காலத்திலே தான் முன் சொன்ன சோலைக் காட்சிகளைக் கீரத்தனார் கண்டு மன்னவனையும், நாட்டையும் வாழ்த்தினார்.

●

காலம் என்பது எப்போதும் ஒரே நிலையில் இருப்பதில்லை. இன்பம் உள்ள இடத்தைத் துன்பமும் துன்பம் உள்ள இடத்தை இன்பமும் மாறி மாறிக் கைப் பற்றுவது இயல்பு; நியதி. இன்பக்கேணியில் தத்தளித்த உயிர் வகைகள் துன்பக் கடலில் மூழ்கும் நிகழ்ச்சி ஒன்று ஒல்லையூர் நாட்டிலே நடந்தது. மக்களால் விரும்பப்பட்டு, புலவரால் பாடப்பட்டு, வீரத்துக்கு அழியா நிலையைத் தந்துவிட்டுப் பெருஞ்சாத்





தன் இறந்துவிட்டான். ஆம். உடலை விட்டு உயிர் சென்றுவிட்டது! ஏறக்குறைய உயிரற்று விட்ட குடிகளின் சடலங்கள் துக்கத்தால் கல்லாகச் சமைந்துவிட்டன.

புலவர்களை ஊக்குவித்த செல்வமலை வீழ்ந்து மண்ணோடு மண்ணாகிவிட்டது. மக்களை மகிழ்வித்த மன்னர் பெருமான் மறைந்தார். மக்கள் புலம்பினர்; மாதர் விசித்தனர். பாணர்கள் ஊமைகளாகிவிட்டனர். பாடினிகளுக்கு மொழியும் பேச்சும் மறைந்துவிட்டன. புலவர் கூட்டம் வெறும் நடைப்பிணமாகி விட்டது. சோகத்தின் முழுமையைப் பெருஞ்சாத்தன் மறைவில்தான் கீரத்தனார் உணர்ந்தார். உள்ளம் வெடிபட அலறினார், மூச்சு விடுவதைக்கூடத் தடுக்குமளவுக்கு உணர்ச்சி வேகம் அவரைத் தாக்கியது. கதறல், அலறல், விசிப்பு, அழுகை, ஓலம்... இவைதான்

அப்போது ஒல்லையூரை முற்றுகையிட்டன.

சாத்தனார் பலவும் எண்ணி யெண்ணி நொந்தார். உயிர் நண்பன் மறைந்தபின் 'இன்னும் தன் உயிர் உலவுகிறதே உல்லாசமாக!' என்று தன்னையே கடிந்து கொண்டார். நடக்கும் சடலம் ஆகிவிட்டாலும் அவர் எண்ணம் எப்போதும் பெருஞ்சாத்தனை நினைந்து உருகிற்று. அவனோடு வாழ்ந்த காலம் அவர் உள்ளத்தில் அழியா ஓவியம் ஆகிவிட்டது. அவன் மறைவுக்குப் பின் எதுவும் அவருக்குத் தெரியாது; தெரிந்துகொள்ளவும் அவர் கவலை கொள்ளவில்லை. பெருஞ்சத்தன் இறப்பும், தன் வாழ்க்கையின் முற்றுப் புள்ளியும் ஒன்றே என்பதுதான் அவர் நம்பிக்கை.

---



ஒருவர்: "சில்லறை நான்தான் கொடுப்பேன்."

மற்றவர்: "ஊஹூம் நான்தான் கொடுப்பேன்."

ஹோட்டல் முதலாளி: "அதனலென்ன! இரண்டுபேருமே கொடுங்களேன்!"

பட்டுப்போன மரம், சுவை பிரிந்த மாங்கனி, மணம் பறந்துவிட்ட மலர்வகை ஆகியவைதான் அவர் கண்ணுக்குத் தெரிந்தன. கால்கள் சென்றவாக்கில் அவர் நடந்தார். எங்கே, ஏன், எதற்கு என்ற கேள்விகளே இல்லை! தற்செயலாக அவர் ஒரு பூஞ்சோலைக்குப் போக நேரிட்டது. பெருஞ்சாத்தனின் பொற்காலப் பூங்காவை அவர் நினைத்துக்கொண்டார். மகிழ்ச்சி வெறி உலவிய அந்தப் பூங்கா இனி வருமா?

தென்றல் மிருதுவாக அடித்தது. அதுவும்கூட அவருக்கு எரிச்சலைத் தந்தது. அந்தக் காற்றில் ஏதோ ஒன்று அவர் பாதத்தில் பட்டது! அது என்ன என்பதை அறியக்கூட அவர் சிரத்தை எடுத்திருக்கமாட்டார், அந்த முல்லைக்கொடியைப் பார்த்திராவிட்டால்; முல்லை மாலையை மகளிர் சூடின பொற்காலச் சோலைக்காட்சி அவர் நினைவைத் தொட்டது. குனிந்து பாதத்தில் பட்டது எதுவோ என நோக்கினார் அவர். அது ஒரு முல்லை மொக்கு! உடனே அவர் மொக்கைத் தடவி அதனிடம் பேசலானார். "ஏ, முல்லை மொக்கே! நீ எவ்வளவு புத்திசாலி! ஒல்லையூர்ப் பெருஞ்சாத்தன் மறைந்த பின்னும் கேடுகெட்டு நான் வாழ்கிறேன்! பாழும் உயிர் மடிய மறுக்கிறது! அவனுக்குப் பின்னும் நான் வாழ்ந்தால் நான் எவ்வளவு கொடியவனாக இருக்கவேண்டும்? நீ மலரவிழ்க்கு முன்னமேயே வீழ்ந்

தாய், சாத்தன் சாவுக்குப் பின் மலர்ந்து 'கொடியவன்' என்ற மகுடத்தைப் பெறுவதா என்று நினைத்து!''

கீரத்தனார் கண்களில் அருவி பாய்ந்தது. முல்லைக்கொடியை நோக்கினார். சில மலர்கள் பூப்பதற்குத் தயாராயிருந்தன. அவற்றை நோக்கி அவர் சொல்லலானார்:

"மலர முயலும் முல்லைகளே! மலர்ந்தால்—ஒல்லையூர்ச்சாத்தன் இறந்த பின்பும் பூத்தால்—கொடியவர்கள், இரக்கமற்றவர்கள், நன்றி மறந்தவர்கள் என்ற அவச்சொற்களை நீங்கள் ஏற்க நேரும், நான் இப்போது ஏற்றிருப்பது போல! ஆகையால் பூவாதீர்கள்! பூவாது மக்களினத்தை விடப் பல படி உயர்ந்தவர்கள் என்ற பெயரை அடைவீர்களாக! அப்படியே மலர்ந்தாலும் முன்போல உங்களை மக்கள் சூடார். ஏனெனில் அவர்கள் தம்மை மறந்து நடைப்பிணமாகிவிட்டனர். முன்போல இளம் பருவ வீரர்கள் உங்களை அணியமாட்டார்; வளைக்கையர் உங்களைப் பறியார்; பாணன் தனக்கும் யாழுக்குமாக உங்களைச் சூடான். பாடினி சூட மறுப்பாள். உங்களை மாலையாகக் கட்டமாட்டார்கள். ஆகையால், பூக்காதே, பூக்காது நற்பெயரை அடைவீர்களாக!''

புலவர் கீரத்தனார் தன் ஆற்றாமையை முல்லை மலர்கள் வாயிலாக வெளியிடுகிறார். முல்லை அஃறிணைப் பொருள். அது ஒன்றும் புலவரை ஆற்றுவிக்கப் போவதில்லை. பின் புலவர் ஏன்



கழுதை: பெண்களுக்கெல்லாம் சம உரிமை கொடுக்கவேண்டுமென்று சட்டம் வந்துவிட்டால் என் சுமையில் பாதி குறைந்துவிடும்.

முல்லையிடம் ஏதோ மொழிகிறார்? தன் துன்பச் சுமையை இலேசாக்கிக்கொள்ள, தன் மன வேதனையைக் குறைத்துக்கொள்ள முல்லை மலர் ஒரு கருவியாக அமைகிறது அவருக்கு. இந்தப் புறநானூற்றுப் பாடலால் முல்லையே அழியா வரம் பெறுகிறது. ஏனென்றால் அது கீரத்தனார் பெருஞ்சாத்தனிடம் கொண்ட அன்பின் ஆழத்தை, அவன் பிரிவால் அவர் வேதனைப்படுவதைத் தன்னுள் அடக்கிக்கொண்டு உங்களுக்கு—அல்ல, நமக்கு உள்ளங்கை நெல்லிக்கனி போல தெளிவாகத் தெரியப்படுத்துகிறது.

இளையோர் சூடார் வளையோர் கொய்யார்
நல்லியாழ் மருப்பின் மெல்ல வாங்கிப்
பாணன் சூடான் பாடினி யணியாள்
ஆண்மை தோன்ற வாடவர்க் கடந்த
வல்வேல் சாத்தன் மாய்ந்த பின்றை
முல்லையும் பூத்தியோ வொல்லையூர் நாட்டே.

—புறநானூறு.

[யாழ் மருப்பு - யாழ்க்கோடு, பின்றை - பின்]

# சன்மானம்

தேவநகர் இளஞ்சேரன்

இரவின் அமைதியைக் கிழித்துக்கொண்டு அந்த ஒலி கேட்டது.

"லொக்...லொக்...லொக்..." தாளமுடியாத வேதனை ரகுநாதனின் மார்பை வெட்டிப் பிளந்தது. மெலிந்து, உலர்ந்து சூம்பிப்போன தன் கரங்களால் மார்பை அழுத்திப் பிடித்துக்கொண்டான் அவன். இருந்தாலும் அந்தப் பாழும் இருமல் மீண்டும் வந்துவிட்டது.

"லொக்...லொக்...லொக்..."

"கமலா!" என்று அலறினான் ரகுநாதன். உள்ளே குழந்தையைத் தூங்கப் போட்டுக் கொண்டிருந்த கமலா ஓடி வந்தாள்.

"என்ன அத்தான்?" — பரபரப்பும், பதைப்பும் அவள் குரலிலே பரவியோடின.

குடிக்க நீர் வேண்டுமெனக் கையை உயர்த்திக் காட்டினான் ரகு. வாய்திறந்து பேசுவதற்குக் கூட வழியில்லாமல் அவன் சக்தியை உறிஞ்சிவிட்டிருந்தது, அவனைப் பிடித்திருந்த அந்தப் பாழும் 'காசநோய்.'

கமலா உள்ளே ஓடினாள். ஆவி பொங்கும் பாலை ஆற்றிக் கொண்டே திரும்பி வந்தாள். இளைத்து, கறுத்து, உருமாறிப் போயிருந்த தன் கணவனை எடுத்துத் தன் மார்புமீது சாய்த்துக்கொண்டு, பால் டம்ளரை அவன் உதட்டருகில் கொண்டு போனாள் கமலா.

அசதியினால் மூடியிருந்த விழிகளைத் திறந்தான் ரகு. ஆவி பொங்கும் பால் அவன் பார்வையில் பட்டுத் தெறித்தது.

"கமலா..." அவனிடமிருந்து மீண்டும் அதே அலறல்.

அவள் ஆதுரத்தோடு அவனை அணைத்துக்கொண்டாள்.

"கமலா, பால்தானே இது" என்றான் ரகு. கமலாவால் புரிந்துகொள்ள முடியாத பரபரப்பு அவன் குரலில் தெறித்தது.

"ஆம், அத்தான்" என்றாள் கமலா, ஒன்றும் புரியாத நிலையில்.

ரகுவின் கண்கள் வியப்பால் விரிந்தன. காய்ந்து உலர்ந்து போன அவன் உதடுகள் ஏதோ சொல்ல வேண்டுமென்ற துடிப்பில் படபடத்தன. அதற்குள் அந்தப் பாழும் இருமல்...... சோர்ந்து விழுந்தான் ரகு.

கமலாவின் விழிகளிலிருந்து வடிந்த கண்ணீர் அவள் பட்டுக் கன்னங்களை ஈரமாக்கிவிட்டது. ரகுநாதன் கேட்க வேண்டுமென்று துடித்ததைச் சொல்ல

வந்து, முடியாது போய்ச் சோர்ந்து விழுந்ததை அந்தப் பெண்ணுள்ளம் புரிந்து கொண்டது. அவள் 'தாலி'யற்றுத் தனியே தன் கழுத்தில் தொங்கும் 'மஞ்சள் கயிற்றை' அவனுக்குக் காட்டினுள்.

அவன் புரிந்துகொண்டான்... சாவோடு போராடும் தன் கணவனின் உயிரைக் காப்பாற்றத் தன் கடைசித் தங்க நகையை — மணவாழ்க்கையின் அடையாளச் சின்னத்தை — அவள் விற்றுவிட்டாள் என்று.

கமலாவின் கரங்களைத் தன் மார்போடு அணைத்துக்கொண்டு அவன் தேம்பினுன்!

●

புயலுக்குப் பின் அமைதி. இரவுக்குப் பின் பகல். இன்னலுக்குப்பின் இன்பம் — வாழ்வு இப்படியெல்லாம் நிலையற்று உருளுகிறதாம். ஆனுல், அடுக்கடுக்கான அல்லல்களும், துன்பமும், துயரமும் நிறைந்ததுதான் ரகுநாதனின் வாழ்வுக் கதை.

ரகுநாதனின் பெற்ருேர்கள் ஏழ்மையின் பிடிப்பிலே வாழ்ந்தவர்கள். மணமாகி நீண்ட காலத்திற்குப் பிறகு 'பிள்ளையில்லையே' என்ற குறை அவர்கள் உள்ளத்தைத் தொட்ட பிறகு அந்தக் கவலையைத் துடைத்தெறியப் பிறந்தவன்தான், ரகுநாதன்.

ரகுநாதனின் பெற்ருேர்கள் வளமான வாழ்க்கையை நடத்தியவர்களல்ல; ஏதோ வாழ்ந்தார்கள்......, உயிரை உடலிலே வைத்திருப்பதையும் 'வாழ்க்கை' என்றுதானே உலக அகராதி சுட்டிக் காட்டுகிறது!

தாங்கள் வறுமையின் அணைப்பிலே வாழ்ந்தாலும், ரகுநாதனின் அறிவு வளர்ச்சியிலே அக்கரை காட்ட மறந்துவிடவில்லை அவர்கள்! ரகுநாதனும் ஏதோ படித்தான் 'இண்டர்' வரை — படித்தாஞ — இல்லை, வாழ்க்கையை அணு அணுவாக — விதவிதமான கோணங்களிலிருந்தும் எடை போட்டான்!

கல்லூரி — அங்கு ஒரு மாணவ உலகம்! ரகுநாதனுக்குக் கல்லூரியில் கால் வைத்ததுமே அந்த உலகத்தைக் கண்டு சிரிப்பு வந்தது. பளபளக்கும் தங்க நகைகளில் — பட்டு ஆடைகளில் தான் — படிப்பு அடங்கிக் கிடக்கிறது என்று நினைக்கும் ஷோக்கு சுந்தரங்களைக் கண்டு அவன் சிரித்தான். வனிதையரின் உள்ளத்தை வளைத்துப் பிடிக்க வேளைக்கொரு உடையும், நாளைக்கொரு 'கிராப்பு'மாகத் திரியும் 'நாட்டு மைனர்'களைக் கண்டு அவன் சிரிப்பு வளர்ந்தது. அந்த வேடிக்கையான, விசித்திரமான மாணவ உலகத்திலிருந்து அவன் ஒதுங்கி நின்ருன். இனம் தெரியாத மனக்கசப்பு அவன் உள்ளத்தில் நிரம்பி வழிந்தது!

ரகுநாதன் இயற்கையிலேயே நல்ல உழைப்பாளி; கலாரசிகனும் கூட. இளம் வயதிலிருந்தே அவன் உள்ளத்திலே ஒரு ஆசை — தானும் ஒரு எழுத்தாளனுகி விட வேண்டும் என்பதுதான் அது! இளம்வயதிலேயே அவன் உள்ளத்திலே வித்தாகப் படிந்து

போன ஆசை வயதும் அறிவும் வளர, வளர பிரம்மாண்டமான ஆலமரமாகவே கிளைவிட்டு வளரத் தொடங்கியது!

ரகுநாதன் பயின்ற கல்லூரியிலே ஒரு நிலையம். அங்கே தன் அறிவுப் 'பசி'க்கு 'உணவு' கண்டான் ரகுநாதன். நாள் நகர, நகர அவனே ஒரு நடமாடும் நூல் நிலையமாக மாறிவிட்டான். ஆம்; அறிவுக் கலைகளை யெல்லாம் அவன் இதயக்கூண்டில் சிறைப்பிடித்து விட்டான்!

ஒருநாள் தீவிரமாக எழுதுவதில் முனைந்திருந்தான் ரகு. அவன் இளமை உள்ளத்திலிருந்து பீறிட்டுப் பாய்ந்த ஆர்வப் பெருக்கு, அவன் அறிவு தேடித் தந்த அனுபவம் அத்தனையின் துணை கொண்டும் முதன் முதலாக ஒரு சிறு கதையை வடித்தெடுத்தான் ரகு!

அவன் எழுதிய சிறுகதையை அந்த மாதக் 'கனல்' பத்திரிகையில் வெளியிட்டதுமன்றி அவன் மேதையைக் கலையுலகம் பாராட்டி வாழ்த்துவதாக ஒரு பெரிய பாராட்டுரையையே வரைந்து தள்ளியிருந்தார், அதன் கூட்டாசிரியர் மதிவாணன்! தன் கதைகளைக் கலையுலகம் கைநீட்டி வரவேற்பதைக் கண்டு களிப்பில் துள்ளினான் ரகு. எண்ணற்ற கதைகளை எழுதிக் குவித்தான். வெற்றி அவனைத் தேடி வந்தது!

ஆண்டுகள் இரண்டு உருண்டன. ரகுவின் இண்டர் படிப்பும் முடிந்துவிட்டது. மேலே படிப்பைத் தொடர்வதற்குப் பணம்......? ரகு திகைத்துப் போனான். அறிவும், ஆர்வமுமிருந்தும் பணமில்லையென்பதனால் படிக்க முடிவதில்லை பலரால், அவர்கள் ஏழைகள் என்பதால்! பணமிருந்தும் படிப்பின் பயனைப் பெற முடிவதில்லை சிலரால், அவர்களிடம் அறிவு ஒத்துழைக்க மறுப்பதால்! வேடிக்கையும் விசித்திரமானதுமான புதிர்கள் பல நிரம்பியதுதானே வாழ்க்கை!

கல்லூரி வாழ்விலிருந்து தரித்திரம் தன்னைத் துண்டித்துவிட்டதை நினைத்து ஏங்கினான் ரகு சில நாட்கள்வரை. பிறகு, தன் முழுக் கவனத்தையும் எழுத்துப் பக்கம் திருப்பினான் — கவலை பறந்தோடிற்று! எழுதுவதிலே ஒரு இன்பம். இலக்கியங்களைச் சிருஷ்டி செய்வதிலே ஒரு ஆத்ம திருப்தி. எண்ணற்ற மானசீகக் கற்பனைகளை ஏட்டிலே தீட்டி, அவற்றிற்கு ஜீவாதாரக் குரல் கொடுப்பதிலே ஒரு உவகை— எழுத்தோடு அப்படி ஒன்றிப் போனான் ரகு.

எழுத்தாளர்களின் எண்சாண் உடம்பில் 'வயிறு' ஒரு சாணே சிரப்புவதைப் பற்றிய உண்மை, எத்தனை பத்திரிகாசிரியர்களுக்கு நினைவிருக்கிறது! ரசிகர்களின் பாராட்டுக் கடிதங்கள், பத்திராதிபர்கள் தங்கள் அன்பைப் பிழிந்தெடுத்து அனுப்பும் மடல்கள் — இப்படித் தினம் தினம் ரகுநாதனின் மேஜைமீது வந்து குவியும் கடிதங்களுக்குக் கணக்கு வழக்கேயில்லை! ஆனால் ஒருவராவது தப்பித்தவறிச் 'சன்மா

னம்' என்ற பெயரால் ஐந்து அல்லது பத்து ரூபாயையாவது அவனுக்கு அனுப்பி வைத்த தில்லை!

ரகுநாதன் மனமுடைந்து போனான். ஆனாலும் எழுதுவதில் அவனுக்கு இருந்த ஆசை-ஆர்வம்-பிடிப்பு-தளரவேயில்லை! ஏதோ ஒரு நம்பிக்கை அவனைத் தூண்டி நடத்தியது.

மகன் படித்து முடிந்ததும் ஏதாவது வேலைக்குப் போவான்—அதனால் தங்கள் வேதனை—ஏழ்மை விடியும் என்று 'இன்பக் கனவு' கண்ட ரகுநாதனின் தாய், எழுத்து எழுத்தெழு·று





"லேடீஸ் அன் ஜென்டில்மன்! இன்றைக்குத் தமிழ்வளர்ச்சி என்பது பற்றி என்னைப் பேசச் சொல்லியிருக்கின்றார்கள் எனவே......"

---

எப்பொழுதும் எழுதுவதில் ஒன்றிக் கிடக்கும் தன் மகனின் அவலநிலையைக் கண்டு உள்ளமுடைந்து போனாள். ரகுநாதனின் பொறுப்பற்ற தன்மையை- எழுத்துப் பித்தை ஒழிக்க 'அவள்' எத்தனையோ முறை அவனுக்கு அறிவுரை கூறிப் பார்த்தாள். அவள் உபதேசங்கள் பயனற்றுப் போகவே அந்தத் 'தாயுள்ளம்' வேறொரு சுருக்கு வழியைத் தேடிப் பிடித்தது!

...அதன்படி அம்மி மிதித்து, அருந்ததியைப் பார்த்து ரகுநாதனின் அத்தை மகள் 'கமலா', கணவனுகக் கைப்பிடித்தாள், ரகுநாதனை மணப்பந்தலில்!

'மருமகள் வந்துவிட்டாள்; இனி மகன் திருந்திவிடுவான்' என்று எதிர்பார்த்த அந்தத் தாயுள்ளம், மீண்டும் ஏமாற்றத்தைத்தான் கண்டது. அணுவளவும் மாற மறுத்துத் தன் போக்கிலே கவனத்தைக் கொட்டியிருந்தான் ரகு. எழுத்துப் பித்து அவனை எப்படியெல்லாமோ ஆட்டிப்படைத்தது!

கமலா, தன் கணவனின் போக்கைக் கண்டு கலங்கிப் போனாள் முதலில். அவனிடம் அவளுக்கிருந்த பிரேமை அவளைத் தடுத்து நிறுத்தியது, அவனைக் கண்டித்துக் கேட்பதிலிருந்து. காலத்தின்மீது பாரத்தைப் போட்டுவிட்டு அவள் கணவனின் போக்கிற்கு வளைந்து கொடுத்தாள்.

ஆண்டுகள் இரண்டு உருண்டன. ரகுநாதன் ஒரு குழந்தைக்குத் தந்தையானான்.

அன்று—

தன்னைத்தானே பெரிய இலக்கிய சேவை புரிவதாகத் 'தம் பட்டம்' அடித்துக் கொள்ளும் ஒரு பத்திரிகாசிரியரிடமிருந்து ரகுநாதனுக்கு ஒரு கடிதம் வந்திருந்தது. அதில்...சிறுநாவல் ஒன்றை ஒரே மாதத்தில் முடித்துத் தருவதானால், அதற்குப் பரிசாக ஐம்பது ரூபாய் 'சன்மானம்' தருவதாக அந்தக் 'கருணாமூர்த்தி' எழுதியிருந்தார்.

ரகுநாதனின் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளியது. 'பெரிய மனது' வைத்து அந்த ஆசிரியர் எழுதியிருந்த அந்தக் கடிதத்தை மீண்டும் மீண்டும் படிப்பதில்

இன்பம் கண்டான் ரகு. அன்றைய தினத்திலிருந்து அந்த நாவலை எழுதி முடிப்பதில் முழு மூச்சோடு ஈடுபட்டான். இரவும், பகலும்-வெய்யிலும், மழையும் - புயலும், தென்றலும் அவனுக்கு ஒன்றுகவே மாறிவிட்டன. எழுதும் ஆர்வத்தில் ரகு தன்னை மறந்தான்; தன் தாயை மறந்தான்; தந்தையை மறந்தான்; தன் மனைவியை மறந்தான்... தன் குழந்தையைப் பற்றிய நினைவுகூட இல்லை அவனுக்கு! அவன் எழுதினுன்; எழுதிக்கொண்டே யிருந்தான்.

நாட்கள் நகர, நகர அவன் எழுதிக் கொண்டுவந்த நாவலும் சிறுகச் சிறுக வளர்ச்சி பெற்றுக்கொண்டே வந்தது. அத்துடன் லேசாகப் புகைந்து கொண்டிருந்த இருமலும் போட்டியிட்டுக்கொண்டு வளர்ந்தது! இருபது நாட்கள் உருண்டு விட்டன. அவன் எழுதிக் கொண்டுவந்த நாவலில் ஒரே ஒரு அத்தியாயம்தான் பாக்கி. அவன் பேனு வேக, வேகமாக ஏட்டுக்கு ஏடு சுழன்றது!

இன்னும் சில தினங்களில் அந்த நாவல் முடிந்துவிடும். பிறகு வரும்புகழுக்கும் மதிப்புக்கும் கேட்பானேன்! எல்லாவற்றையும் விடஅந்த ஆசிரியர் தருவதாக வாக்களித்திருக்கும் 'சன்மானம்' அவன் பாலைவன வாழ்க்கையில் கொஞ்சம் பசுமையையாவது பரவவிடாதா?... ரகுவின் உள்ளம் கற்பனை மாளிகைகளை எழுப்பி அழகு பார்த்தது!

மனிதப் பிண்டங்கள் எண்ணுவதைப் போல வாழ்வில் எது தான் நடக்கிறது? நடந்தது? நடக்க முடிகிறது? ரகுநாதன் தன் நாவலின் கடைசிப் பகுதியை நெருங்கிக் கொண்டிருந்தான். அன்று அந்தப் பாழும் இருமலின் கோர விளையாட்டு — வெறித்தனம் உச்சநிலைக்குப் போய்விட்டது. அவன் இருமினுன் பயங்கரமாக! அந்த இருமலோடு வடிந்த 'பச்சை இரத்தம்' குங்குமச் சாறுபோல வடிந்து எழுதிக் கொண்டிருந்த ஏட்டைக் கறைபடுத்திவிட்டது. அப்பொழுதுதான் அவனுக்குப் புரிந்தது, அவனைப் பிடித்திருப்பது சாதாரண இருமலல்ல... பாழும் 'காசநோய்' என்று.

கற்பனைக் கனவுகளில் தான் நிர்மாணித்து, உருவாக்கி மகிழ்ந்த 'இன்ப மாளிகை' இடிந்து விழப் போவதைக் கண்டு ஏக்கம் பிறந்தது ரகுவுக்கு. எப்படியோ துடிக்கும் மார்பைக் கையினுல் அழுத்திக் கொண்டே கடைசி அத்தியாயத்தையும் எழுதி முடித்துவிட்டான் ரகு. அதை அஞ்சலில் சேர்த்துவிட்டால் அவன் பொறுப்புத் தீர்ந்தது போலத்தான். அவசர அவசரமாக அவற்றை ஒழுங்குபடுத்திக் கொண்டு அஞ்சல் நிலையத்தை நோக்கி நடந்தான் ரகுநாதன்.

அதை அஞ்சலில் அனுப்பி விட்டு அவன் திரும்பினுன். அவன் உள்ள ஓடையில் நிராசை நீரோட்டம் சுழியிட்டுக் கொப்பளித்துக்கொண்டோடியது.



ஒருவர்:— (போலீஸைப் பார்த்து) ஏப்பா! இங்கே இருக்கே? ட்யூட்டிக்குப் போகலையா?

ஏரி பாராக்காரர்:— பரீட்சை ரிஸல்ட் காலம் பாருங்கோ! அதனால் எனக்கு இங்கே ட்யூட்டி போட்டிருக்காங்க!

---

இனந்தெரியாத ஏக்கம் அவன் உள்ளத்தில் மின்வெட்டியது. லேசான மயக்க உணர்ச்சியால் தன் தலை சுற்றுவதை உணர்ந்தான் ரகு. அவன் கால்கள் தள்ளாடின. கண்கள் விழிவட்டத்தில் சொருகிக்கொண்டன. மஞ்சள் நிறம்படிந்துவிட்ட அவன் விழிகளுக்கு அவன் சுழல்வது போன்றதொரு பிரமை. மறுகணம், வேரற்ற மரம்போலச் சாய்ந்தான் கீழே—

யாரோ வழிப்போக்கர்கள் அவனை வீட்டிலே சேர்த்துவிட்டனர். அன்றைய தினத்திலிருந்து படுத்த படுக்கையாகிவிட்டான் ரகு. கணத்திற்குக் கணம் அந்தப் பாழும் இருமல், அவன் உடலை - உயிரைத் தேய்த்துக் கொண்டு வந்தது !

சாவின் அணைப்பில், மரணத்தின் மடியில் விழுந்து கிடந்த அவன் உள்ளத்தில் எத்தனையோ ஆசைகள் எழுந்து மடிந்தன; உருப்பெற்றுத் தேய்ந்தன. அவன் உள்ளம் எத்தனையோ இன்பக் கனவுகளை உருவாக்கிப் பார்த்தது.

செல்வம்—ஆமாம் — அவனது செல்வக் குழந்தைதான் வளர்கிறான். அவனோடு அறிவும், எழிலும் வளர்கின்றன. அவன் இதயத்திலும் அதே ஆசைதான்—அப்பாவைப் போல ஒரு எழுத்தாளனாகி விட வேண்டுமென்பது. அவன் படிக்கிறான்; எழுதத் தொடங்குகிறான். வெற்றியும், புகழும் ரகுநாதனிடம் ஓடி வந்ததைப் போலவே அவனிடம் வந்து சரணடைகின்றன — இப்படி ஒரு ஆசைக் கனவு ரகுநாதனின் இதய அரங்கில் எழுந்து நின்றது.

'முட்டாளே, உன் மகனை ஒரு எழுத்தாளனாக்க — அறிவு போதிக்கப் பணமிருக்கிறதா உன்னிடம்? காளி நாக்கிலே எழுத, கவிபாடத் தொடங்கும் காலமல்லவே இது! ஏன் வீண் ஆசை?' இப்படி ஒரு எண்ணம் அவன் ஆசையை அடித்து வீழ்த்தியது.

"அப்படியானால் என் சாவிற்குப் பின்...?"—உடைந்துபோன உள்ளத்திடம் இப்படி ஒரு கேள்வியை வீசி எறிந்தான் அவன். பயங்கரமானதொரு

எதிர்காலப் படலம் அவன் மனக் கண்முன் விரிந்து நின்றது கோர மாக!

"பரட்டைத் தலையுடனும், கிழிந்து அழுக்கேறிப் போன ஆடையோடும் வீடெங்கும் சுற்றி வீதியெங்கும் 'பவனி' வருகிறது அந்தப் பிச்சைக்கார கும்பல். ஒவ்வொருவர் கையிலேயும் உடைந்து மூளியாகிப் போன மண்சட்டியொன்று. பரிதாப கரமானக் குரலிலே பிச்சை கேட்கிறது அந்தப் பஞ்சைக் கூட்டம்... அதோ தள்ளாடித் தள்ளாடி நடை போடுகிருளே அந்தப் பிச்சைக்காரி...ஐயோ... என் தாயா...அவளோடு ஒட்டிக் கொண்டு கிளிப்பேச்சால் கிண்ணியிலே பிச்சைக்கு ஏகுருனே அவன்...எதிர்காலத்தில் நாடு புகழும் எழுத்தாளனுவான் என்று எவனைப்பற்றி கனவு கண்டேனே அந்தச் செல்வமா?... என் மனைவி...அவளை மட்டும் காணவில்லை. ஆமாம்; சாவின் மடியில் அமைதியாக உறங்கிக் கொண்டிருக்கின்ருளோ, என்னவோ"—ரகுநாதன் சிருஷ்டித் துப் பார்த்த கனவுலகிலே அவன் இப்படியெல்லாம் பேசினுன்; புரண்டான். அவன் இதயம் ஓலமிட்டது பேரிரைச்சலோடு.

படுக்கையில் சோர்ந்து விழுந் தான் ரகு.

நிராசையின் நிழல் அவன் முகத்தில் படிந்து விட்டது. சாவின் கோரக் கரங்களில் சிக்கி விட்ட அவனிடமிருந்து ஏதோ முணுமுணுப்பு மட்டும் அடிக்கடி கேட்டுக் கொண்டிருந்தது.

"நாளை...நிச்சயமாக வந்து விடும். வந்துவிட்டால் சாவின் பிடியிலிருந்து என்னை மீட்க எந்த டாக்டரையாவது நெருங் கிப் பார்க்கலாமே"—

காய்ந்து உலர்ந்துபோன ரகு நாதனின் உதடுகள் இதையே திருப்பித் திருப்பி ஓயாது, ஒழியாது முணுமுணுத்தன.

அன்று—

நோய்ப் படுக்கையில் ரகு நாதன் படுத்துக் கொண்டிருந் தான். சோர்ந்து களைத்துப் போயிருந்த அவனது மனம் எதையோ எண்ணிப் புரண்டது. தூரத்தில் எங்கோ 'இசைத் தட்டு' வைத்துக் கொண்டிருந் தார்கள். கேட்கும் தெம்பும், திராணியும் அற்றுப்போன தன் காதுகளைத் தீட்டி வைத்துக் கொண்டு அவன் கேட்டான்.

"ஆசையென்னும் கயிற்றினுல்
ஆடிடும் பம்பரமே!
அற்றதெனில் சுற்றுமோ — பின்
அதுமரமே..........!"

ரகுநாதனின் சிந்தனை தன் வேலையைத் தொடங்கியது. ஆசைக் கயிற்றினுல் ஆடிடும் பம் பரமாகத்தான் அவன் ஆடிவந் தான். 'சன்மானம்' தான் அந்த ஆசைக் கயிறு. அவன் ஆடிய பம்பரம். ஆசைக் கயிறைவிட்டு அந்தப் பம்பரம் விலகிவிட்டது. அப்படியானுல் ஆட்டம் ஓய்ந்து தலைகிறங்கி விழும் பம்பரத்தின் கதிதானு—அவனுடையதும்?

"லொக்...லொக்..." அந்தப் பாழும் இருமல் அவன் உடலைக் குலுக்கியது..."லொக்... லொக்..." மீண்டும் மீண்டும்...




"கமலா" என்று அலறினான் ரகு. இருமலின் வேகத்தைத் தாங்கமாட்டாது படுக்கையில் வீழ்ந்தான். அவன் விழிகள் மூடிக்கொண்டன. நித்திரை... உறக்கம்... மீளாத நித்திரையில்—ஆழ்ந்த உறக்கத்தில் அமிழ்ந்து போனான் ரகு. அவனது கடைசி மூச்சும் வெடித்துச் சிதறிக் காற்றோடு கலந்து மறைந்தது!

"அத்தான்"—கமலா அலறினாள்.

"ரகு.....ரகு"— தாயுள்ளம் வெடித்துச் சிதறியது—

மறுநாள்—

"ஸார்...போஸ்ட்!" என்ற குரலைக்கேட்டு வெளியில் வந்தாள் கமலா.

வந்திருந்தது கடிதமல்ல; பணம். ஆம்; ரகுவிற்குத்தான். அவன் எழுதிய 'சன்மானம்' என்ற நூலுக்குச் 'சன்மான'மாக ஐம்பது ரூபாய் அவனைத் தேடி வந்திருந்தது. அத்துடன் அவனை 'இலக்கியச் சிற்பி', 'சிறுகதை மன்னன்', 'கதையுலக வேந்தன்' என்றெல்லாம் போற்றிப் பாசுரம் பாடி ஒரு குறிப்பு வேறு!

கமலா அந்தப் பணத்தை எடுத்துக்கொண்டு வெறிபிடித்தவள் போல எங்கோ ஓடினாள்!

மனிதர்கள் எக்குலத்தோராயினும் சரியே இறுதியில் என்னிடம்தான் வந்தாக வேண்டும் என்று பறைசாற்றுவது போல இருந்தது அந்தச் சாக்காடு—மயான பூமி! அந்தச் சுடலையின் நடுவே, நெருப்பின் அணைப்பிலே, அவள் கணவன் – அந்த இலக்கியச் சிற்பி, சிறுகதை மன்னன், கதையுலக வேந்தன் – வெந்து சாம்பலாகிக் கொண்டிருந்தான். அங்குதான் அவள் ஓடிவந்தாள்.

உடலெல்லாம் வெந்து இன்னும் சில நிமிடத்தில் ஒரு பிடி சாம்பலாகிப் போக இருக்கும் தன் கணவனின் எரியும் சிதை மீது அந்தப் பணத்தை வைத்தாள் கமலா.

"சன்மானம்"—கமலாவின் உதடுகள் முணுமுணுத்தன.

எரியும் நெருப்பில் 'சன்மானம்' சாம்பலாயிற்று. அந்த அவலக் காட்சிக்கு முடிவுரை கூறுவது போல, கமலாவின் 'பேய்ச் சிரிப்பு' அந்த மயானத்தைக் குலுக்கியது!

# பெண்கள் முன்னேற்றம்

மங்கை

## 4

ஒரு வீட்டுக்காரியின் 'வேலைக் கூடம்' சமையற்கட்டுத்தான். அந்த அறையைச் சுத்தமாக வைத்துக்கொள்ளத் தவறுவதால் என்னென்ன தீங்குகள் நேருகின்றன! பார்வதி, சரசா உரையாடல் சமையலறை பற்றிச் சூழ்ந்தது.

"சில பெண்கள் சமையலறையின் ஓரமாகவே பாத்திரங்களைக் கழுவுவதைப் பார்க்கலாம்—தண்ணீர் தாராளமாக உள்ளே ஓடி ஈரம் படிய வைக்கிறது. அது கொஞ்சம்கூட ஆரோக்கியமானதல்ல!"

"உண்மையே. பாத்திரங்களைக் கழுவ ஓர் ஓரத்தில் 'சிமண்டி'னால் சிறு சுவர் எழுப்பிவிட்டு, தண்ணீர் ஓடத் தூம்பு ஒன்று அமைத்திருந்தால் மிகவும் நல்லது. தண்ணீர் ஒருபோதும் தேங்கி நிற்கச் சம்மதிக்கலாகாது. இன்னும் நாம் கழுவிய பாத்திரங்களை அநேகமாக அலமாரிகளிலேயே அடுக்கி வைக்கவேண்டும். ஆதலால் சமையற்கட்டில் அலமாரி இருப்பது அவசியம்."

"அகப்பைகளையும் கரண்டிகளையும் சுவரில் ஆணியடித்து அதில் மாட்டி வைத்தால் அழகாக இருக்கும்—இல்லையா?"

"அதுதான் சரியான ஒழுங்கு. துடைப்பத்தையும் மற்றும் அழுக்கேறிய துணிமணிகளையும் ஒருபோதும் உள்ளே வைத்துக் கொண்டிருக்கக்கூடாது. அதையெல்லாம் அப்புறப்படுத்த வேண்டியது பெண்ணின் கடமை."

"அதுமாத்திரமா? பல நாட்களான அழுகிய காய்கறிகளை அடுக்களையினுள்ளே கொண்டு வரலாகாது. கோடை காலத்தில் பால் கெட்டுப் போகாமலிருக்க வேண்டுமானால் என்ன செய்ய வேண்டும் தெரியுமா? பால் புட்டியைக் குளிர்ந்த நீர் நிறைந்த ஒரு பாத்திரத்தினுள்ளே வைத்து அதை ஒரு குளுமையான இடத்தில் வைத்திருக்க வேண்டுமாம்; லேசான துணியினால் அதை மூடிவிட்டு அத்துணியின் ஓரங்களை நீரில் அமிழவிட்டிருக்க வேண்டுமாம். இப்படிச் செய்தால் பால் விரைவில் கெட்டுப் போகாதென்று படித்த நினைவுமுண்டு."

"அது முற்றிலும் உண்மைதானடி! அதைப் போலவே வெண்ணெய் எப்படிக் கெட்டுப் போகாமலிருக்க முடியுமென்று சொல்லுகிறேன். வெண்ணெயை ஒரு தட்டில் வைத்து அதை

ஒரு மண் பாத்திரத்தினல் மூடி வைத்திருக்கவேண்டும். அதன் மீது ஒரு லேசான துணியை விரித்து அதன் நான்கு ஓரங்களேயும் தண்ணீரில் அமிழ வைத்திருக்கவேண்டும். அப்போது வெண்ணெய் கெட்டுப் போகாது. இம்மாதிரி முறைகளேக் கையாண்டால் உணவுப் பொருள்களேச் சுத்தமாகச் சாப்பிடலாம். நாம் சமைத்த ஆகாரங்களேத் தனியே ஒரு அலமாரியில் வைத்திருக்க வேண்டும். அடுப்பாங்கரையிலேயே அங்கு மிங்குமாகச் சிதறிப் போட்டுவிட்டிருக்கக் கூடாது. சமையல் சாப்பாடு வைத்திருக்கும் அலமாரியை என்றும் சுத்தம் செய்ய வேண்டும்."

"மேல் நாடுகளில் பெண்கள் சமையல் விஷயத்தில் ஆரோக்கிய வழியை மேற்கொள்கிருர்கள். அது அவர்களது முன்னேற்றத்தை எடுத்துக் காட்டுகிறது. நமது பெண்களும் முன்னேற்றமடையவேண்டுமானல் மேற்படி வழிகளேக் கடைப்பிடிக்கவே வேண்டும்!"

"ஆண்களும்உற்சாகப்படுத்திக் கூடமாட ஒத்தாசை செய்தால் நன்ருகவிருக்கும்! ஆனல் ஆண்கள்தான் பெண்களே அடுக்களேக்குள் தள்ளிக் கதவடைத்துவிடுகிருர்களே!"

சரசா சிரித்துக்கொண்டே, "அப்பேற்பட்ட கணவர்களுள் என் கணவரும் ஒருவரென்று சொல்!" என்ருள். அந்த இனிய உரையாடலினின்று ஒரு கணம் அப்புறம் சென்ற அவளது மனம், கண்களேக் கடிகாரத்தினிடம் இழுத்துச் சென்றது.

"அடியே, மணி நாலு! இன்னும் அரை மணி நேரத்தில் குழந்தைகள் வந்துவிடுவார்கள்! நான் பேசாமல் உட்கார்ந்து கொண்டிருக்கிறேன்! காப்பி போடவில்லே இன்னும்!" என்று துடித்துக்கொண்டே எழுந்தாள்.

பார்வதி விடை பெற்றுச் செல்லுமுன், "சரசா! எனக்குப் பழக்கமான பெண் ஒருத்தியுண்டு. அவள் எங்கள் சங்கத்தின் தலேவி. அவள் பேசுவது எத்தனே ருசிகரமாகவிருக்கும் தெரியுமா? நாளே அவளேயும் அழைத்து வருகிறேன்—உனக்குத் தடை இல்லேயென்ருல்!" என்ருள்.

"அவள் வருவதில் எனக்குத் தடை என்ன இருக்கிறது? ஆனல் 'உங்கள் சங்கத் தலேவி' என்பதைக் கேட்கும்போதே பயமாக இருக்குதடி!" என்று கூறிச் சிரித்தாள் சரசா.

"ரொம்ப நல்லவள். எம். ஏ. வரைக்கும் படித்தவள். பெண்கள் முன்னேற்றத்திற்குத் தொண்டுபுரிய அவளுக்கு மிகவும் ஆவல்!"

"ஐயையோ, அப்படியானல் என்னேயும் உங்கள் சங்கத்தில் சேர்த்துவிடப்போகிருள்!"

"நிச்சயமாக! பயப்படாதே—அதுவும் நல்லதுதானே?"

பார்வதி சென்றதும் சரசா ஏதேதோ யோசித்தவாறே அடுப்பாங்கரையை நோக்கி நடந்தாள்.

(இப்பகுதி தொடர்ந்து வரும்)

# வேட்கை

ஏ. எஸ். ராகவன்

எங்கள் வீட்டு மொட்டை மாடி என் சொர்க்கம். அங்கே கூரை வேய்ந்து தனி அறை ஒன்று அமைத்திருந்தேன். அங்கே தான் என் ஓய்வு நேரச் சீட்டுக் கச்சேரி, உதவாக்கரை சர்ச்சைகள், வீட்டுக்குக் கொண்டுவந்த ஆபீஸ் வேலையோடு ஐக்கியம் எல்லாம். அந்த அறையில் பழைய கால 'ஈஸீ சேர்' ஒன்றைப் போட்டு வைத்திருக்கிறேன். அதில் சாய்ந்தபடி சிகரெட் பிடிப்பது எனக்கு ஆனந்தம்.

இன்றும் அப்படித்தான் படுத்துக்கொண்டிருக்கிறேன். ஆனால் மனதில் ஆனந்தம் பிறக்கவில்லை. சில சமயம் இப்படிப்பட்ட சூழ்நிலை நம்மையறியாமல் வந்து அமுக்கிக் கொள்கிறது. அப்போதெல்லாம் எனக்குப் பொழுது கழிவது பெரும் பிரச்னையாயிருக்கும்.

நல்ல நிலவு பொழிந்துகொண்டிருந்தது. நிலவுக்கும் மனத்திற்கும் ஏதோ தொடர்பு இருக்கும் என்று தோன்றுகிறது. ஏனெனில் நிலவின் மெல்லிய ஒலி இதயத்தின் மெல்லிய நரம்புகளில் பாய்ந்து கிளுகிளுப்பை உண்டாக்குகிறது.

சிகரெட்டை ஒரு இழுப்பு இழுத்துவிட்டுக் காலை நீட்டிப் படுத்தேன். எப்பொழுதோ காரை பூசப்பட்டதால் மாடியின் அடித்தளம் சில இடங்களில் பெயர்ந்தும், விகாரமாயும் காணப்பட்டது. அதைப் பார்க்கும்போது எப்படியோ வாழ்க்கையில் ஏற்படும் இத்தகைய குறைபாடுகள் நினைவுக்கு வந்தன. அவற்றை அவ்வப்பொழுது திருத்திக்கொண்டுவிடவேண்டும். இல்லையேல் அவை களங்கமாகத் தென்படும்.

"சார், சார்..." என்று வாசற்கதவை யாரோ தட்டும் குரல் கேட்டது. எழுந்திருந்து கீழே இறங்கினேன்.

வாசலில் ஒரு வண்டி நின்றுகொண்டிருந்தது. அதிலிருந்து ஒரு பெரிய மனிதரும், ஒரு இளம் பெண்ணும் இறங்கினார்கள். என்னவோ அந்த வினாடி ஊருக்குச் சென்றிருந்த என் மனைவிதான் திரும்பி வந்துவிட்டாளோ என்ற பிரமை தட்டியது எனக்கு.

"நீங்கள்தானே இங்கே குடியிருப்பது?" என்று கேட்டார் அவர்.

"ஆமாம்" என்றேன்.

"உங்களைப்பற்றிப் பையன் ரொம்பச் சொன்னான்...... நான் இங்கே பத்து நாள் தங்குவேன்...உங்களுக்குக் கஷ்டமில்லையே!" என்றார் அவர்.

நான் உடனே, "இல்லை" என்றேன். பிறகு அந்தப் பெண் நின்ற திசையைப் பார்த்தேன். அவளும் அதே சமயம் என்னைப் பார்த்தாள். நான் மாடிப் படி ஏறினேன்.

திரும்ப வந்து நாற்காலியில் சாய்ந்தபோது என் மனம் ஒரு டன் பாரம் சுமந்திருப்பதைப் போலக் கனத்தது. அத்துடன் அது சிரமபட்டுப் பட படத்துக் கொண்டிருந்தது. கையிலிருந்த சிகரெட் அணைந்துவிட்டதால் அதைத் தூக்கி எறிந்துவிட்டு நிதானமாக நினைவுபடுத்திப் பார்த்தேன். அந்தப் பெண்! அழகானவள்தான் .........அவர் என்ன சொன்னார்?......பத்து நாளைக்குத் தங்கியிருப்பேன்! அப்படியானால் அவளும் இருப் பாள் அல்லவா?...அநேகமாய் இருப்பாள்......ஆனால் அவள் இருந்தாலென்ன, இல்லாவிட் டால் என்ன? எனக்கு என் அந் தக் கவலை! நானோ கல்யாணமான வன். என் மனைவி பிறந்தகம் போயிருக்கிறாள்.

பிறந்தகம் என்ற நினைவு வந்த தும் இப்பெண் இப்போது இங்கு வந்திருப்பதும் ஒருவேளை கணவனைப் பிரிந்துதான் இருக் குமோ என்ற சந்தேகம் பிறந் தது. ஆனால் புவியில் எல்லோ ருமா லலிதாவைப் போல இருப் பார்கள்?

லலிதா என் மனைவி என்பதை வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன். ஏனெனில் அவளை மணந்துகொண்ட நாள் முதல் எனக்கு நிம்மதி இல்லை. சிறுவயதில் கலெக்டர் உத்தி யோகம் பார்ப்பது, மகாராஜா வாக இருப்பது எல்லாம் மிக எளிது, சீக்கிரத்தில் கிடைக்கக் கூடியது என்று எண்ணியிருந் தேன் நான். அதன்படியே ஆகி யிருந்தேனானால் லலிதாவை மணந்துகொண்டு இருந்திருக் கலாம். அல்லது அவளை எவ் விதக் குடும்பக் கஷ்டத்துக்கும் ஆளாக்காமல் பூப்போல வைத் திருக்கலாம். ஆனால் நான் ஒரு ஏழைக் குமாஸ்தாதானே!

கீழே 'படார்' என்ற சத்தம் கேட்டது. நான் பரபரவென்று இறங்கினேன். அந்தப் பெண் கையில் ஒரு படத்தை வைத்துக் கொண்டு ஹாலில் நின்றுகொண் டிருந்தாள். என்னைக் கண்டதும் தவறு செய்த மாணுக்கன் போல விழித்தாள்.

அவள் கையிலிருந்த போட் டோவைப் பார்த்தேன். அது லலிதாவின் படம் அல்லவா!

"தவறுதலாய்க் கீழே விழுந்து விட்டது...மன்னிக்கவும்" என் றாள் அவள்.

எனக்குக் கோபம் வந்தது. ஆனால் அவளுடைய பார்வை அதைக் கரைத்துவிட்டது. "பரவாயில்லை..." என்றேன்.

"இந்தப் படத்தை மாட்ட லாம் என்று ஆரம்பித்தேன்... அது கீழே விழுந்துவிட்டது" என்றாள் அவள் மீண்டும்.

"பரவாயில்லை, பரவாயில்லை" என்று சொல்லிவிட்டு லலிதா வின் படத்தை எடுத்து மாட்டி னேன். கண்ணாடி உடைந்திருந்த தால் லலிதா படத்தில் விகா ரமாகக் காணப்பட்டாள்.

"அது உங்கள் மனைவியின் படமா?" என்று கேட்டாள் அவள்.

நான் அவளைப் பார்த்தேன். அது என் மனைவியின் படம்தான்

என்ற உண்மையை வெளியிட அந்தச் சமயத்தில் கஷ்டமாயிருந்தது. மென்று விழுங்கிக் கொண்டே "ஆமாம்" என்றேன்.

"அன்னம், அதுக்குள்ளே உன்னை யார் படத்தை மாட்டச் சொன்னாங்க?......அடடா, நீ சொன்னதைக் கேட்கமாட்டே, இங்கே வா" என்று இரைந்தபடி வந்தார் பெரியவர்.

"இதோ வந்துவிட்டேன், தாத்தா," என்று கூறிக்கொண்டே அவள் ஓடிவிட்டாள்.

நான் மாடிக்கு வந்து படுத்தேன். வெகு நேரம் தூக்கம் வரவில்லை. அன்னம்! இந்தப் பெண் என் மனத்தில் குழப்பத்தை உண்டுபண்ணிவிட்டாள். திடீரென்று டால்ஸ்டாய் எழுதிய 'அன்னாகரீனா' என்ற நாவலின் நினைவு வந்தது. பெயரில் ஒற்றுமை இருப்பதைப் போலப் பட்டது. அந்த அன்னத்துடன் இந்த அன்னத்தை ஒப்பிட்டுப் பார்த்தேன். என் முயற்சி முழுவதும் முடிவதற்குள் அயர்ந்து தூங்கிவிட்டேன்.

* * *

காலையில் எழுந்ததும் உலகமே வெள்ளி முலாம் பூசப்பட்ட புதுப்பாத்திரம் போலக் காணப்பட்டது. என்னைத் தவிர எல்லோருமே சுறுசுறுப்புடன் ஓடிக்கொண்டிருந்தார்கள்.

'கோட்-ஸ்டாண்டில்' சுருண்டு கிடந்த துண்டை எடுத்து மேலே போட்டுக்கொண்டு காப்பிக் கடைக்குப் போக இறங்கினேன். மாடிப் படியில் சிறிய கண்ணாடி ஒன்று உண்டு. அதில் முகத்தைப் பார்த்தபோது எனக்கே பயமாயிருந்தது. என் முகமா அது? கன்னங்கள் ஒட்டியிருந்தன. கண்கள் பாதாளத்தில் இருந்து விழித்தன.

மாடிக்கு ஏறித் தலையை வாரிக்கொண்டேன். முகத்திற்குப் பவுடர் மட்டும் பூசிக்கொண்டு கீழே இறங்கும்போது அவள் எதிர்ப்பட்டாள். அதிகாலையிலேயே எழுந்திருப்பாள்







போலத் தோன்றியது! வீடு பூராவும் சாணமிட்டு மெழுகிக் கோலம் போட்டிருந்தாள். இப்படி ஒரு நாளாவது லலிதா செய்திருப்பாளா?

ஹோட்டலில் காப்பியைக் குடித்துக் கணக்கெழுதிவிட்டுச் சிகரெட்டைப் பற்ற வைத்துக் கொண்டு வீடு திரும்பினேன். வாசலில் தாத்தா நின்றுகொண்டிருந்தார். "என்ன தம்பி! காப்பி குடிக்கக் கிளப்புக்குப் போனீங்களா?" என்று கேட்டார்.

"ஆமாம்" என்றேன்.

"என் தம்பி! சம்பாதிக்கிற காசைக் கிளப்புக்காரன் கிட்டேயும், வெத்திலே பாக்குக் கடைக்காரன் கிட்டேயும் கொடுத்திட்டுக் கையிலே காசு இல்லாமத் திண்டாடணுமா? வீட்டிலே சமையல் செய்யப்படாது?...... உனக்குக் கல்யாணம் ஆயிட்டுதல்லே?" என்று கேட்டார்.

"ஆயிட்டுது..." என்றேன்.

"பொண்டாட்டி ஊருக்குப் போயிருக்குதா?........ஏன் கோபமா?... இதெல்லாம் சகசம் தான்... இதோ என் பேத்தி அன்னத்தைப் பாரு. அவளுக்கு என்ன குறை? அந்தத் தொரைக்கு வைர மூக்குத்தி வேணுமாம், காதுக்குத் தோடு வேணுமாம், ஐயாவுக்குக் கடியாரம் வேணுமாம்...... படிச்சவங்களுக்கே மூளை குறைவுதான், தம்பி..." என்றார் அவர்.

"நீங்க சொல்றது சரி, தாத்தா......ஆனா என் பெண்டாட்டி அப்படியில்லே... நான் நெறையச் சம்பாதிக்கல்லேன்னு அவளுக்குக் குறை..." என்றேன்.

அவர் சிரித்தார். "அது கூடாது, தம்பி. என்னதான் பொண்ணு பணக்காரப் பொண்ணானாலும் புருசன் கிட்ட அடங்கி நடக்கணும்......அதுதான் குடும்பத்துக்கு அழகு" என்றார்.

அன்று சாப்பாடு அவர்கள் வீட்டில் நடந்தது. வீட்டின் சொந்தக்காரருக்கு நெருங்கிய உறவினர்கள் இவர்கள் என்று தெரிந்தது. அன்னத்துக்கு உடம்பு சரியில்லையாம். அதற்காக டாக்டரிடம் காண்பித்துப் போக வந்திருப்பதாகவும் அவர் சொன்னார்.

மறுநாள் எனக்கு ஆபீஸ் விடுமுறை. வீட்டிலேயே இருந்

தேன். வழக்கமாக நண்பனின் வீட்டிற்குச் சீட்டாடச் செல்வதைக்கூட அன்று விட்டுவிட்டேன்.

அன்னம் ஒரே நாளில் என்னோடு தாராளமாகப் பேச ஆரம்பித்துவிட்டாள். அவள் சிரிக்கும் அழகே அழகு. கன்னத்தில் குழி விழ அவள் சிரிப்பது என் உடலைப் புல்லரிக்கச் செய்யும். என் மனைவியைப்பற்றிக் கேட்டுத் துளைத்துவிட்டாள். எங்களுக்குள் என்ன மன வருத்தம் என்று கேட்டாள். என் லலிதா அழகானவளா, அவளுக்கு வைர மூக்குத்தி உண்டா என்று கேட்டுத் தெரிந்துகொண்டாள். தனனைப்பற்றியும் சொல்ல அவள் மறக்கவில்லை.

"என் புருசரு ரொம்பக் கோபக்காரரு...ஒரே ஒரு தடவைதான் அங்கே போனேன்... கல்யாணமாகி வருசம் ரெண்டாச்சு...ஆனா நான் அவரை ஒரே ஒரு தடவைதான் பார்த்திருக்கேன்..." என்று கூறும்போது அவள் குரல் கம்மியது.

"உன் புருசன் என்ன வேலை பார்க்கிறான், அன்னம்!" என்று கேட்டேன்.

"அது தெரியாது......அவரு எந்த வேலை பாத்தா நமக்கென்ன? வீட்டுக்கு வரும்போது அவருக்குச் சமையல் செஞ்சு, அன்பாப் போடணும்......அதுதானே!......வீட்டுக்கு வேணுங்கிறதை அவர் வாங்கிப் போடணும்...இதைத் தவிர வேறு கவலை எனக்கு எதுக்கு?" என்றாள்.


புதிய காவியம் -
கொடி முல்லை
வாணிதாசன் எழுதியுள்ள
அற்புதமான காதல் ஓவியம்!
தெளிந்த கருத்துக்கள்!
எளிய நடையில்!
விலை அணா 12
பொன்னி ..... சென்னை-21.


அவள் கொள்கை சரி என்று பட்டது. அவளோடு பேசிக்கொண்டே இருந்தேன். அன்னம் சாதாரணப் பெண்ணல்ல. இப்பேர்ப்பட்ட பெண்ணை விலக்கிவைக்க அவள் கணவன் முட்டாளாய்த்தான் இருக்க வேண்டும்.

முதலில் அன்னத்தைப் பார்த்தபோது என்னைக் கவ்விக்கொண்டிருந்த விபரீத எண்ணங்கள் மெல்ல ஓட ஆரம்பித்தன. அதே சமயம் லலிதாவின் நினைவுகள் என்னை வாதிக்க ஆரம்பித்தன. பாவம்! செல்வத்திலேயே வளர்ந்த பெண்; வறுமையில் கால் பாவவில்லை என்று எண்ணிக்கொண்டேன்.

அன்று ஆபீஸிலிருந்து நான் திரும்பி வந்தபோது வாசலில் ஒரு வண்டி நின்று கொண்டிருந்தது. நான் அவசரமாக உள்ளே நுழைந்தேன். ஊஞ்சலில் ஓர் இளைஞன் உட்கார்ந்து கொண்டிருந்தான். பக்கத்தில் அன்னம் நின்று கொண்டிருந்தாள். அவன் அவளுடைய கணவன் போலும்!

"அன்னம், என்னவோ நடந்தது நடந்து போச்சு. எல்லாம் எங்கம்மா அடிச்ச கூத்துத்தான். இப்போ அவ போயிட்டா! இனிமே நாம் சுகமா இருக்கலாம்" என்றான் அவன்.

நான் நுழைந்து விட்டேன். "வாங்க அண்ணா" என்றாள் அவள். என் உடம்புபுல்லரித்தது.

"வாங்க மாப்பிள்ளை, தங்கச்சி உங்களைப் பார்க்கத் துடிச்ச துடி எனக்கல்ல தெரியும்?" என்றேன்.

அன்னம் என்னவோ நினைத்துக் கொண்டவள் போல, "அண்ணா, உங்களுக்கு ஒரு கடிதம் வந்திச்சு. இதோ கொண்டு வரேன்" என்று உள்ளே போய் ஒரு கவரைக் கொண்டுவந்து கொடுத்தாள்.

நான் மாடிக்குப் போய் அதைப் பிரித்துப் படித்தேன். லலிதாதான் எழுதியிருந்தாள்.

"அன்புள்ள கணவருக்கு,

லலிதா தாழ்மையுடன் எழுதிக் கொள்வது. நான் தவறு செய்தவள். என்னை மன்னியுங்கள். உங்களைக் காணாமல் ஒரு விநாடி இங்கே இருக்க முடியவில்லை. நெருப்பின் மேல் இருப்பது போல் இருக்கிறது. நான் செய்த குற்றங்களை மன்னித்து என்னை ஏற்றுக் கொள்ளுங்கள்.

அன்புள்ள
லலிதா"

நான் உடனே புறப்பட்டேன். பெட்டியில் வேண்டிய சாமான்களை எடுத்து வைத்துக் கொண்டேன். முகத்தில் படர்ந்து கிடந்த தாடி, மீசைகளைக் களைந்தெறிந்து விட்டுப் பிரகாசமாக முகத்தை மாற்றிக் கொண்டேன்.

வாசலில் வண்டியில் நான் ஏறிக்கொண்டபோது அன்னம் வந்து என்னை வழியனுப்பினாள். "அண்ணாச்சி, சீக்கிரம் அண்ணியை அழைச்சிக்கிட்டு வாங்க. நான் இன்னும் நாலு நாள்தான் இருப்பேன்" என்றாள்.

வண்டி உருண்டு வேகமாக ஓடியது. நான் லலிதாவை மனத்தில் உருவப்படுத்திக் கொண்டே அதைவிட வேகமாக ஓடிக் கொண்டிருந்தேன். என் மனத்தில் பதுங்கியிருந்த வேட்கைப் புலி இப்போது குபீரென்று கிளம்பி அட்டகாசம் செய்ய ஆரம்பித்தது.

என்னைக் கண்டதும் லலிதா அழுதுகொண்டே காலில் விழுந்தாள். அவளைத் தூக்கி நிறுத்தி "அழாதே லலிதா, நீ இல்லாமல் எனக்கு மட்டும் அங்கே சுகமாக இருந்ததா என்ன?" என்றேன்.

அவள் சிரித்தாள். மனத்தை விட்டுச் சிரித்தாள். அந்தச் சிரிப்பில் பழைய மாசுமருவை எல்லாம் அகற்றிவிட்ட புனிதை போல அவள் விளங்கினாள்.

# வளரும் இலக்கியம்

### நாடகம்

இப்பொழுது பிரச்சார நாடகங்கள் மக்களால் பெரிதும் வரவேற்கப்படுகின்றன. நாட்டிலே அறியாமை — மூடத்தனம் — கண்மூடி வழக்கங்கள் தலைவிரித்தாடும்பொழுது வெறும் இலக்கிய நாடகங்களோ, கலைரசம் சொட்டும் காவியங்களோ மக்களின் எண்ணத்தில் ஒட்டமுடியாது. சூழ்நிலையைத் தெளிவுபடுத்தித் தன்னிறைவு செய்யும் நாடகங்கள்தான் பெரிதும் பயன் தருவதாயிருக்கின்றன.

நண்பர் மு. கருணாநிதி சமுதாய முன்னேற்றக் கருத்துக்களைக் கொண்ட சீர்திருத்த இயக்கத்தைச் சார்ந்தவர். எனவே நாட்டு மக்களால் விரும்பப்படும் நல்ல கருத்துக்கள் அவரது எழுத்துக்களில் நிழலாடுகின்றன. ஒரே முத்தம், நச்சுக் கோப்பை அவரது எண்ணங்களின் எதிரொலி!

'சூழ்ச்சியே வேதம்-துரோகமே கீதை' என்றிருக்கும் ஒரு விபீஷணனை அச்சாணியாகக் கொண்டு சுழல்கிறது 'ஒரே முத்தம்'. கதையிலே நாட்டுப்பற்று, மொழிப்பற்று, காதல் உயர்வு, சமத்துவம், குடியாட்சி முதலியன வலியுறுத்தப்படுகின்றன. அநுபந்தமாக இ[illegible]ட்டிருக்கும் நகைச்[illegible] பகுதியிலும் நல்ல கருத்துக்கள் தெளிக்கப்பட்டிருக்கின்றன.

நாடகத்தின் போக்கு விறுவிறுப்பாக அமைந்ததொன்றே கருணாநிதிக்கு வெற்றி என்று சொல்லலாம். படித்துச் செல்லும் பொழுதே காட்சிகள் சினிமாப் படமாக நம்முன் தோன்றுகின்றன. நறுக்குத் தெறித்தாற்போல அமைந்துள்ள வசனங்கள் நாடகத்திற்குச் சுவையூட்டுகின்றன. கடைசி வரையிலும் பாத்திரங்களின் குண இயல்புகள் கெட்டுப் போகாதவண்ணம் காத்து வந்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மற்றொன்று—

குறுகிய காலத்திற்குள்ளாகவே இரண்டாவது பதிப்பாக வெளிவந்திருக்கிறது 'ஒரே முத்தம்'. தென்றல் நூற் பதிப்பகத்தார் 'கண்ணைக் கவரும்' முறையில் இவ்விரண்டாம் பதிப்பை வெளியிட்டுள்ளார்கள்.

உண்மைக் காதலை உணர முடியாத உளுத்துப்போன சமுதாயத்திற்கும், ஏழை பணக்காரன் என்று பாகுபடுத்திப் பார்க்கும் முதலாளித்துவ மனப்பான்மைக்கும் நச்சுக்கோப்பை தந்துள்ளார் மு. கருணாநிதி. நாடகத்திற்காக எடுத்துக் கொள்ளப்பட்ட கதை சாதாரணமானதுதான். என்றாலும் கட்டுக்கோப்புக் கலை[illegible] வசனங்கள் — கருத்துச்

செறிவுள்ள வார்த்தைகள் நாடகத்திற்குச் சுவையூட்டுகின்றன. "மது! இந்த உலகை நிலை கலக்கியதே, அது!" ஒரு நண்பனின் மனமாற்றத்திற்குக் காரணமாக இருக்கும் இந்த வாக்கியம் எவ்வளவு அழகாக அமைந்திருக்கிறது! எனினும் 'ஒரே முத்த'த்தில் நாம் காணும் முழுத்தன்மையை இந்த 'நாடகத்தில் காண முடியவில்லை. திறந்த வெளி அரங்குகளிலே நடித்துக் காட்டப்பட வேண்டிய பிரச்சார நாடகம் 'நச்சுக்கோப்பை!'

மேடை நாடகங்கள் எழுதுவதில் நன்கு தேர்ச்சி பெற்ற நண்பர் 'மேகலை', 'பாஞ்சாலங் குறிச்சி அல்லது மண்வாசி' என்ற நாடகத்திற்குப் பிறகு இலட்சியவாதியை அச்சிட்டு வெளியிட்டுள்ளார். காதல் சம்பவங்களே இல்லாமல் ஒரு முழு நாடகத்தை எழுதி அதனை வெற்றிகரமாக நடித்துக் காட்டவும் முடியும் என்பதை நிரூபித்துள்ளார் 'இலட்சியவாதி'யின் மூலமாக!

இந்த ஆசிரியர் தமது நாடகத்திற்கு அதிகமான பாத்திரங்களை அமைத்துக் கொள்ளவில்லை. ஒரு சில நடிகர்களை வைத்துக் கொண்டே அவர்களை உணர்ச்சிச் சித்திரங்களாக ஆக்கிவிட்டிருக்கிறார். இன்றைய சமுதாயப் பிரச்னைகள் சிலவற்றைச் சுட்டிக்காட்டி அவற்றைத் தீர்க்கும் வழிகளையும் சொல்லிச் செல்கிறார். பகைவனுக்கும் அன்பு காட்டும் தமிழனின் பண்பாடு இந்நாடகத்தில் அருமையாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

நாட்டுக்குத் தேவையான கருத்துக்கள் இருக்கின்றன! யாரும் சுலபமாகப் புரிந்துகொள்ளும் எளிய வசனங்கள்! சலிக்காமல் படிக்கத் தூண்டும் சரளமான நடை — இன்னும் என்ன வேண்டும்? ஒருமுறை 'இலட்சியவாதி'யைப் படித்துப் பாருங்களேன்!

ஒரே முத்தம்

மு. கருணாநிதி எழுதியது. விலை 1-4-0. வெளியிட்டோர்: தென்றல் நூற்பதிப்புக் கழகம், சலகண்டபுரம், சேலம்.

நச்சுக் கோப்பை

மு. கருணாநிதி எழுதியது. விலை 0-12-0. வெளியிட்டோர்: திராவிடன் பதிப்பகம், த. பெ. எண். 18. வேலூர்.

இலட்சியவாதி

எழுதியவர்: மேகலை. விலை 0—12—0. கிடைக்குமிடம்: சுந்தரம், இளங்கோ நிலையம், ஆத்தூர், சேலம்.

## கிடைக்கப் பெற்றோம்

வேலைக்காரன் (நாடகம்)

எழுதியவர்: எல். எஸ். ஆனந்தம். விலை 0-6-0. கிடைக்குமிடம்: ஏ. எஸ். சிங், நியூஸ் ஏஜெண்ட், நாகர்கோயில்.

சூழ்ச்சிச் சுழல் (நாடகம்)

எழுதியவர்: பாசுமணி. விலை 0-8-0. கற்பக வெளியீடு, முசிறி அஞ்சல், திருச்சிராப்பள்ளி.

## சிறுகதைகள்

உருப்படியான சிறுகதைகளை இப்பொழுது அதிகம் பார்க்க முடிவதில்லை. புதுமைப்பித்தன் போன்றவர்களிடம் குடிகொண்டிருந்த கற்பனை வளம் அவர்களுடனேயே செத்துவிட்டதோ என்னவோ! எனினும் பல புதிய எழுத்தாளர்கள் உற்பத்தியாகிக் கொண்டுதான் வருகிறார்கள். அவர்கள் உற்பத்தி செய்யும் சிறுகதைகள் மார்க்கட்டிலே கத்தரிக்காய்கள் குவிந்து கிடப்பதைப் போலப் பெருகிக் கொண்டு வருகின்றன. தங்க நகை அணிந்துகொள்ளவேண்டுமென்று ஆசைப்படுபவள், பித்தளையை மினுக்கிப் போட்டுக் கொண்டாவது தன் ஆவலைத் தணித்துக் கொள்கிறாளல்லவா? அதைப்போலத்தான் இன்றைய புதுயுக 'மறுமலர்ச்சிகள்' ஏதோ, கதை பண்ணுகிறார்கள்! பதிப்பக உடையார்களும் அவைகளைப் புத்தகங்களாக வெளியிட்டு 'வாணவேடிக்கை' செய்கிறார்கள். வெளியிடப்படும் அத்தனை புத்தகங்களையும் வாங்குவதென்றால் வாங்குபவர் அல்லது வாசிப்பவர் நிச்சயம் ஒரு குப்பைத்தொட்டியாகத்தான் இருக்கவேண்டும். குப்பையில் கிடந்தாலும் மாணிக்கம், மாணிக்கம்தான் என்று சொல்வார்களே, அதுபோல இந்தச் சில்லறை வெளியீடுகளிலும் நம் சிந்தையைக் கவரும் சிறுகதைகள் வெளிவரத்தான் செய்கின்றன.

மாப்பஸானின் ஒரு சிறுகதையை - மாப்பஸானின் கதைகளை படிப்பதென்றால் மல்கோவா மாம்பழம் சாப்பிடுவதுபோல —கவிஞர் வாணிதாசன் மொழிபெயர்த்திருக்கின்றார். மொழிபெயர்ப்பு என்று சொல்ல முடியாதபடி கவிஞரின் கற்பனைத் திறன் கதைக்குக் கவிதை முலாம் பூசியிருக்கிறது. மேட்டுக் குடியினரின் கேளிக்கை வாழ்வில் ரசாபாசத்தைச் சித்தரிக்கின்றது. பெரிய இடத்துச் செய்தி!

இன்னொன்று! ரா. தணலன் எழுதியிருக்கும் தாய் என்பது. இக்கதையில் பல்லாயிரம் தொழிலாளர்களின் நலன் கருதித் தன் மகனையே 'களப் பலி' வாங்கும் ஒரு தாயைப் பார்க்கின்றோம். கதை சொல்லிச் செல்லும் முறை புதிதாக இருக்கிறது. தணலனின் எழுத்துக்களைப்பற்றித் தனியாகச் சொல்லவேண்டுமா, என்ன?

"கடும்பிணியாளன் நான்
இறந்தபின் மாதே
கைம்பெண்ணுக
வருந்தாதே
இடஞ் செய்யும் வைதீகம்
பொருட்படுத்தாதே
ஆசைக்குரியவனை நாடு—
அன்போடு—தார் சூடு—
நலம் தேடு"

பாரதிதாசனாரின் இந்தப் பாடலைப் பின்னணியாகக் கொண்டு அன்புமணி எழுதியுள்ள இக் கதை சுமாரானதுதான்! மரணத்

மைதத் தழுவிக்கொண்டிருக்கும் கணவனின் கடைசி விருப்பத்திற்கேற்ப மறுமணம் செய்து கொண்ட ஒரு விதவைப் பெண்ணின் அவலக் குரல்தான் யார் அழிவுக்காரி? என்பது.

பெரிய இடத்துச் செய்தி: வாணி தாசன் எழுதியது. விலை 0-4-0.

தாய்: ரா. தணலன் எழுதியது. விலை 0-4-0.

யார் அழிவுக்காரி: அன்புமணி எழுதியது. விலை 0-3-0.

[இம்மூன்று புத்தகங்களையும் வெளியிட்டோர்: செல்வ நிலையம், 110, வ. பி. ரோடு, சென்னை-7.]

## காதல் பிரச்னை

முடிவு காண முடியாத பிரச்னை காதல் ஒன்றுதான் என்று தைரியமாகச் சொல்லலாம். வானம் எவ்வளவு விரிந்ததோ அதைவிடப் பன்மடங்கு விரிந்தது காதல். அதனை அணுகும் இன்றைய எழுத்தாளர்களை அகண்ட வெளியிலே சிறகடித்துச் செல்லும் சின்னஞ் சிறு சிட்டுக்குருவிகள் என்றுதான் சொல்லவேண்டும். அணிற் பிள்ளை, கொய்யாக் கனியைக் கொறித்துப் போடுவதைப் போலக் காதற் கதைகள் 'தீட்டும்' எழுத்தாளர்களுக்கு இன்று பஞ்சமே இல்லை.

யாழ்ப்பாணத் தோழர் ஒருவர் காதல் கதையொன்றைப் புத்தகமாக வெளியிட்டுள்ளார். காலேஜ் காதல், சினிமாக் காதல், கடற்கரைக் காதல் போலக் காணிவல் காதல் என்பது இவரது கதையின் பெயர். கேளிக்கை விழாவில் சந்தித்துக் காதல் கொண்ட ஒரு ஜோடியின் காதல் கதை! காதலி, காமுகர் சிலரால் சற்பழிக்கப் பட்டுவிடுகிறாள். காதலன் ஒரு வேசியினால் 'தவறு' செய்துவிடுகிறான். கடைசியில் கெட்டுப் போன அந்த 'ஒருவனும் ஒருத்தியும்' ஒன்று சேர்கின்றனர். இதுதான் 'காணிவல் காதல்' கதை! 'காணிவல் காதல்' என்றால் என்னவென்று விழிக்கிறீர்களா? Cornival என்ற ஆங்கிலச் சொல்லைத்தான் 'காணிவல்' என்று 'தமிழ்ப்படுத்தி'யிருக்கிறார். கதை முழுவதிலும் கொழும்புத் தமிழ் நம்மைத் திணற அடிக்கிறது.

மட்டமான கற்பனைகளுக்கு ஒரு எடுத்துக் காட்டு கல்லூரி ஒழிக என்பது. கல்லூரி ஒழிக என்பதைவிடக் காதல் ஒழிக என்றுவது கூச்சல் போட்டிருக்கலாம்! சாதாரணக் கதை—அதுவும் கவரத்தக்க முறையில் எழுதப்படவில்லை.

இந்த வரிசையில் தோழர் 'வீரா'வின் காதலோ காதல் நம் கவனத்தைக் கவருகின்றது. ஆசிரியர்மீது மாணவி காதல் கொள்கின்றாள். ஆசிரியரோ, மனைவிக்கும், மாணவிக்கும் இடையில் பெரிய மனப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கின்றார். இப்படி அன்பு-காதல்-கடமை ஆகியவைகளை ஒன்றோ

டொன்று மோதவிட்டு முடிவு காண்கிருர். நண்பரிடம் கதை சொல்லும் திறமை இருக்கிறது. எனவே கதை படிப்பதற்குச் சலிப்பில்லாமல் செல்கிறது

இன்னொரு 'தோழர்' "சித்த மும் பொழுது விடிந்தால் காதல்; பொழுது முடிந்தால் காதல்; காதலை விட்டால் வேறு கதி யில்லையா எழுதுவதற்கு? இந்த எழுத்தாளர்கள் எப்பொழுது தான் காதல் குட்டையை விட்டுக் கரையேறுவார்களோ?" என்று கேட்டுவிட்டுக் கள்ள மார்க்கெட் வாழ்க என்று கோஷமிடுகிருர். காதலுக்கும் கள்ளமார்க்கெட் டுக்கும் நிறையத் தொடர்பு இருக் கிற தென்கிறீர்களா? ஆனல், தோழர் எஸ். சங்கரன் காதலைத் தொட்டுப் பார்க்காமலேயே சாதாரண மனிதனின் இன்ப துன்பங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதியிருக்கும் மூன்று சிறுகதைகளும் நன்று யிருக்கின்றன.

'காணிவல்' காதல்: எழுதிய வர்: புதுமைலோலன். விலை 30 சதம். கிடைக்குமிடம்: புதுமை லோலன், நாவலர் அச்சுக்கூடம், வண்ணர்பண்ணை, யாழ்ப்பாணம்.

கல்லூரி ஒழிக: எழுதியவர்: விருதை க. இராமசாமி. விலை 0–3–0. வெளியிட்டோர்: பைந் தமிழ்ப் பதிப்பகம், 404C/12, மெயின் ரோடு, கோவில்பட்டி.

காதலோ காதல்: எழுதியவர்: 'வீரா' விலை 0–4–0. வெளியிட் டோர்: பானு பதிப்பகம், நாண யக்காரத் தெரு, நாகப்பட்டணம்.

கள்ள மார்க்கெட் வாழ்க: எழுதி யவர்: சங்கரன். விலை 0–8–0. செங்கதிர்ப் பிரசுரம், 25, செங் கழுநீர்ப் பிள்ளையார் கோவில் தெரு, மண்ணடி, சென்னை-1.

வரப்பெற்ருேம்

வழக்கில் சிக்கிய வனிதை

தீட்டியவர்: C. S. அறிவழகன், விலை 0–4–0. பரிமளப் பண்ணை: 17/430, ரங்கே கவுடர் வீதி, கோவை.

விஷக் கத்தி

எழுதியவர்: ஆசைக் கண்ணு, விலை 0–3–0. மூர்த்தி வெளியீடு. 4, அருப்புக்காரன் தெரு, சென்னை-21.

பலே தம்பிகள்

எழுதியவர். காழி கேசவன், விலை 0–1–3, சுண்டெலிப் பதிப் பகம், 108, வடக்கு ரத வீதி, சீர்காழி.

மணிமுடி

ஆக்கியோன்: தமிழ் நேயன்: விலை. 0–2–6. கிடைக்குமிடம், பெ. சுப. நாச்சியப்பன், நாச்சியா புரம், இராமநாதபுரம்.

நீங்கள் கேட்பவை

இயற்றியவா: இரா. சண் முகம், விலை 0–2–0. வெளியிடு வோர்: சி. புலியரசு, 125, கோவிந்தப்ப நாய்க்கன் தெரு, சென்னை-1.

திராவிட மறுமலர்ச்சிப் பாடல்கள்: பாடியவர்: எம். ஆர். கணேசன். விலை 0–1–6. கலாநிதி பதிப் பகம், அம்பலத்தாடி, குமார அஞ்சல், மதுரை.

—அரசன்.

# வெள்ளி முளைத்தது

வீர. பழனியப்பன்

"ஏய்......"

...............

"ஏய்...ய்......"

'பட்' 'பட்' என்று கதவைத் தட்டும் சப்தம்.

"ஏய்...எருமை மாடு"

'படார்'...'படார்'. கதவைப் பலமாகத் தட்டும் சப்தம்.

'ஹூம்...ம்' என்ற முனகல் வீட்டினுள்ளிருந்து வந்தது.

"கதவைத் திற, கழுதை."

தங்கம் தூக்கக் கலக்கத்தோடு கதவைத் திறந்தாள். செல்லப்பன் அவளை விறைத்துப் பார்த்துக்கொண்டு உள்ளே நுழைந்தான். அவனுடைய முகத்தில் தென்பட்ட கோபக் குறிகளைக் கண்ட தங்கம் அவசரம் அவசரமாக உணவு பரிமாறுவதில் முனைந்தாள்.

செல்லப்பன் கையிலிருந்த 'பைலை' ஒரு மூலையில் போட்டுவிட்டுச் சட்டையைக் கழற்ற ஆரம்பித்தான்.

"சாப்பிட வாங்க."

செல்லப்பன் ஆத்திரத்தோடு அவளைப் பார்த்தான். "சாதம் போடனுமென்ற ஞாபகமாச்சும் இருக்கே...சந்தோஷம்"

அவன் குரல் எகத்தாளத்தினால் இறுமாப்புடன் விளங்கியது. செல்லப்பனின் 'துர்வாச அவதார'த்தின் காரணம் தங்கத்திற்குப் புரியவில்லை.

"ஆபீஸிலே எதுவும்..."

"இனிமே ஆபீஸிலே என்ன இருக்கு? எல்லாம்தான் முடிந்து போச்சே!" என்று கிளம்பிய 'புயல்' மொழிகள் அவள் ஆவலை அடித்து விரட்டின.

சற்றுநேரம் மௌனம். பிறகு செல்லப்பன் எதையோ நினைத்துக் கொண்டவன் போல் சாப்பிட உட்கார்ந்தான். வட்டியில் கருணைக்கிழங்கு குழம்பு பரிமாறப்பட்டிருந்தது. வெடிமருந்து நிரம்பிய வீட்டில் ஒரு துளி நெருப்புப் பட்டால் போதாதா! புகைய ஆரம்பித்தது.

"நான் எதுவும் சாப்பிடணும்னு நினைப்பு இருந்தாத்தானே, நல்ல காய்கறிகளைப் பார்த்து வாங்கி வரச்சொல்லிச் சமைப்பே. ஏதோ தண்டத்துக்கு அவிச்சுப் போடுகிறவதானே நீ?"

"வேறே எதுவும் நல்லதாக் கிடைக்கல்லியாம்..."

"நீ இருக்கிற இடத்திலே எது கிடைக்கும்? இந்தச்

சாதத்தை உன் தலையிலேயே போட்டுக்கோ!"

தட்டு தாழ்வாரத்துக்குப் பறந்தது.

அவளுக்கு அழுகை அழுகையாய் வந்தது. தேம்ப ஆரம்பித்தாள்.

"அழவேறே ஆரம்பிச்சுட்டியா?"

ஒரு 'வெடி' சிதறியது.

மேலும் ஒரு விம்மல். அவள் கண்களில் நீர் துளித்தது. மௌனம்! அவளுடைய அழுகைக்கும், அவனுடைய பொறுமைக்கும் கொஞ்ச நேரம் போட்டா போட்டி நடந்தது. வெற்றி அழுகைக்குத்தான்! ஆனால் பொறுமை காலி செய்த இடத்தில் கோபமா வந்து குடி புக வேண்டும்!

"செய்வதையும் செய்துட்டு அழுது வேறேயா அடம்பிடிக்கிறே? சனியன்! இதையும் வாங்கிக்கிட்டு இன்னும் நல்லா அழு!"

'பளார், பளார்'......அவன் கைகள் தங்கத்தின் கன்னத்தைப் பதம் பார்த்தன.

"அம்மாடி" என்ற ஒரு அலறல் அவள் வாயிலிருந்து கிளம்பியது.

"நீ எங்கிருந்துதான் எனக்கென்று வந்து தொலைஞ்சியோ? மூதேவி, உன் முகத்திலே முழிச்சாலே மூணு நாளைக்குச் சோறு கிடைக்காதே!" என்று கையை உதறிக்கொண்டு வெளியே கிளம்பினன்.

கோபக் கொள்ளி தன் கொடுமையை முடித்துக்கொண்டு 'கம்' மென்று இருந்தது.

●

வெளியே சென்றும் செல்லப்பனுக்கு ஆத்திரம் அடங்கவில்லை. சற்று நேரமாவது நிம்மதியாக இருக்கலாம் என்று சினிமாவுக்குச் சென்றான். அமைதி, காசுக்கு அகப்பட்டு விடும் பொருளா என்ன? பார்த்த படம் அவன் உள்ளத்திற்கு நிம்மதி அளிக்கவில்லை. அந்தப் படத்தின் கதை, காதலை அடிப்படையாகக் கொண்டது. ஒரு இளைஞன் விதவை ஒருத்தியைக் காதலிக்கிறான். அவன் காதலுக்குச் சமூகம் பல இடையூறுகளைச் செய்கிறது. அந்த எதிர்ப்புகளை அவன் துணிவோடு எதிர்த்துப் போராடுகிறான். அதற்குள் 'இடைவேளை' வந்துவிட்டது. கொட்டகையில் ஒரே கலகலப்பு.

"கோபால், படம் எப்படி?"

"ரொம்ப நல்லா இருக்கு."

செல்லப்பன் படத்தைப் பற்றிப் பேசுபவர்களைப் பார்த்தான். வாரிவிட்ட 'கிராப்'; வாயிலே 'சிகரெட்'; நாகரிக உடைகள்; நறுக்கு மீசை; அவர்கள் செய்யும் ஆடம்பரமே அவர்களைக் காலேஜ் மாணவர்கள் என்று காட்டிவிட்டது. மேலும் என்ன பேசுகிறார்கள் என்பதைச் செல்லப்பன் 'சாடை'யாகக் கவனித்தான். ஆனால் அவர்களோ செல்லப்பனை அலட்சியமாகப் பார்த்து

விட்டுத் தங்கள் பேச்சை மறுபடியும் ஆரம்பித்தனர்.

"படம் என்னவோ சாதாரணம்தான், கோபால்" என்றான் முதல் ஆசாமி.

"ஆனால், பல நல்ல கருத்துக்கள் இருக்கின்றன அல்லவா?" இது இரண்டாம் ஆசாமியின் பதில்.

"இந்தப் படம் பிடிக்கிறவன்களுக்கே காதல் கதையைவிட்டா வேறே கதி கிடையாது போல் இருக்கு..." அவன் குரலில் ஒரு அலட்சியம் தொனித்தது.

"நீ நினைக்கிறது ஒருவிதத்தில் சரி. ஆனால் இந்த மாதிரிக் காதல் கதைகளைப் படமாக்கின மக்களுக்காகிலும் ஓரளவு விழிப்புணர்ச்சி ஏற்படும்."

"என்னப்பா இந்தப் படத்திலே நீ அவ்வளவு பெரிய அதிசயத்தைக் கண்டுவிட்டே?"



"சாதாரணமா இதுவரையிலே வந்த படங்களிலே காதலர்கள் பணக்காரன், ஏழை வித்தியாசத்தினாலே—சாதி வேறு வேறு என்ற காரணத்தினாலே துன்பப்படுவதாக மட்டும்தான் பார்த்திருக்கோம். ஆனால் இந்தப் படத்திலே இந்த இரண்டு காரணங்களோடு 'விதவை' என்ற மூன்றாவது காரணமும் கூடச் சேர்ந்திருக்கிறது பாரு. அது ஒருபுதுமைதானே!"

"படம் பிடிக்கிறதிலே என்ன புதுமை இருக்கிறது? அந்த மாதிரி வாழ்க்கையிலே எங்கே நடக்கிறது, கோபால்"

"ஏன் நடக்கவில்லே?" என்று அந்தக் கோபால் கூறும்போது "டிட்டிரிங்" என்று மணியடித்தது.

"சரி, அது கிடக்கட்டும். படம் ஆரம்பிக்கப் போகிறது. அதைப் பாரு." அவர்கள் உரையாடல் நின்றுவிட்டது.

படமும் ஆரம்பமாகிவிட்டது. கோபாலின், 'ஏன் நடக்கவில்லே?' என்ற கேள்வி இன்னும் செல்லப்பனின் செவிகளில் ரீங்காரமிட்டுக்கொண்டிருந்தது.

"ஏன் நடக்கவில்லே?"

"எவ்வளவோ இவை போன்று நடந்துகொண்டுதான் இருக்கின்றன. வெளியே ஏன் போய் உதாரணத்துக்கு அல்லவா

னேன்? உன்னையே நீ எண்ணிப் பார்" என்றது செல்லப்பனின் உள்ளம்.

ஆமாம். செல்லப்பனுக்கும் தங்கத்திற்கும் நடந்த திரு மணம் இந்த ரகத்தில் சேர்க்க வேண்டிய காதல் மணம்தான். அவர்கள் இருவருக்குள்ளும் எவ்வளவோ வேற்றுமைகளைக் காட்டிப் பயமுறுத்திப் பார்த் தது இந்தச் சமூகம். செல்லப் பன் உழைப்பை நம்பி உயிர் வாழ் பவன். ஆனால் தங்கமோ 'நகத் தில் அழுக்குப் படாமல் வாழும்' ஒரு பணக்காரனின் மகள். அவன் முதலியார். அவள் சாதி யில் 'பிள்ளை'. அவன் கல்யாண மாகாதவன். ஆனால் அவளோ கணவனை இழந்த கைம்பெண். இருந்தும் இவர்கள் இருவருக் கும் இணைப்பை ஏற்படுத்தியது காதல். சங்கடங்கள் பல ஏற்பட் டும் அவர்கள் சதிபதிகளாயினர். 'ஆனால்......மணம் ஆனபிறகு, அவர்கள் களிப்போடு வாழ்வு நடத்துகின்றனரா?' என்று யாரோ செல்லப்பனின் காது களில் கேட்பது போன்று தோன்றிற்று. செல்லப்பனின் சிந்தனை 'சினிமா'விடமிருந்து விடை பெற்றுக் குழப்பத்தில் ஆழ்ந்தது.

"இல்லை" என்றது உள்ளம்.

"களிப்போடு வாழ்வதற்குத் தானே காதல் மணம் செய்து கொண்டோம். கல்யாணம் ஆன பிறகு மகிழ்வோடு வாழ முடிய வில்லை என்றால் அது யாருடைய தவறு? காதலின் தவறா? அல் லது காதலர்களின் தவறா?" என்று அவனே சிந்தித்துப் பார்த்தான். சீக்கிரத்தில் பதில் கிடைப்பதாகத் தெரியவில்லை. அவனுடைய மனம் ஒரு நிலையில் நில்லாமல் ஊஞ்சலாடியது.

"விமலா..."

"ஹூம்..." என்ற குரலும் வளையலின் கிண்கிணிச் சிரிப்பும் கேட்டது. செல்லப்பனின் சிந் தனை கலைந்தது; திரும்பிப் பார்த் தான். ஒரே இருள். ஆனால் குரல் மட்டும் கேட்டுக்கொண் டிருந்தது.

"இந்தப் படம் எடுத்தவன் ஒரு முட்டாள், விமலா. காதல் என்றால் கஷ்டப்படுவதுதான் என்பது போலல்லவா கதையை அமைத்திருக்கிறான்?"

"நம்மைப் போலவே எல்லா ருக்கும் எளிதில் காதலில் வெற்றி கிடைத்துவிடுகிறதா என்ன?" அவள் சொற்களுக்குச் சிரிப்பு பின்னணியிசைத்தது.

"காதல்..." செல்லப்பனின் சிந்தனை தறிகெட்டு ஓடியது.

அப்போது செல்லப்பனும் தங்கமும் காதலர்கள். கல்யாணம் நடக்கவில்லை.

"தங்கம்..."

"உ...ம்...ம்"

"என்ன தங்கம், பேசாம இருக்கிறே?"

மௌனம்.

"நீ இப்படியே பேசாமல் இன்னும் எவ்வளவு நாழிக்குத் தான் இருப்பாயென்று நானும் பார்த்துவிடுகிறேன்."

அவன் வார்த்தையில் கண்டிப் பும் களிப்பும் கலந்திருந்தன.

"ஹி...ஹி ஹி" அவள் சிரித்தாள். அவனும் சிரித்தான்.

"முத்து கொட்டிடப்போகிறது." அவன் கேலி செய்தான்.

"கொட்டினால் பொறுக்கி வச்சுக்கங்கோ. அப்...பு...றம் ரொம்ப உதவியாய் இருக்கும்."

மறுபடியும் ஒரே சிரிப்பு.

"தங்கம்...காதல் கதை எழுதுகிறவர்களையெல்லாம் பிடிச்சுத் தூக்கிலே போடணும்..."

"அவர்கள் எல்லாம் உங்களுக்கு ஏதும் இடைஞ்சல் செய்தார்களா?"

"சாதாரண இடைஞ்சலா செய்திருக்கிறார்கள்? லைலாமஜ்னு கதையைப் பாரு, லைலாவும் கயஸூம் செத்துப் போனாங்க. ரோமியோ—ஜூலியட், அம்பிகாபதி—அமராவதி இவர்கள் கதையெல்லாம் எழுதினார்களே, யாரை யாச்சும் உயிரோடு வைத்தார்களா? கொலை...எல்லாம் கொலை மயம்தான். இந்தமாதிரிக் கதைகளையெல்லாம் படித்த பிறகு காதலை எவன் சிறந்ததென்று சொல்லுவான்? காதலென்றால் உடனே கல்லறை நினைப்புத் தானே முதலில் வரும். அப்புறம் காதல் எங்கே வளரும்?"

"அதையெல்லாம் படித்த பிறகும் நம்மைப் போன்றவர்களுக்குப் பயம் வரவில்லையே?"

"நீ பொல்லாத குறும்புக்காரி, தங்கம்!"

"நம்ம கல்யாணம் நடந்தாலே ஆச்சரியப்படும்! எங்க."

"ஆமாம்......சாதாரணமாக் காதல் மணம் நடப்பதே அருமை. அதிலேயும் நம்ம கல்யாணம் கலப்பு மணம்; விதவை மணம். ஒரு கல்லிலேயே மூன்று பழங்களென்றால் ஊர் ஆச்சரியப்படுவதுக்குக் கேட்கவா வேணும்!"

"ஆச்சரியப்படுவதை மாத்திரம் இவ்வளவு அழுத்தம் திருத்தமாச் சொன்னீங்களே, நாளைக்கு வாங்கப்போற வசவுகளை மறந்து போயிட்டீங்களா?"

"எனக்கு நீ. உனக்கு நான். வேறே யாரைப்பற்றி நாம் கவலைப்படணும்?"

"சாதாரணமாகத் தம்பதிகளுக்குள் ஏதாவது தகராறு ஏற்பட்டால், அமைதியடைவதற்கு அப்பா, அம்மா முதலிய உறவினர்களிடமாவது போகலாம். ஆனால் எனக்கும் தங்கத்திற்கும் தகராறு ஏற்பட்டால் எங்கே போவது?"

"எனக்கு நீ, உனக்கு நான்."

அந்த வார்த்தைகள் அவனை நோக்கிச் சிரித்தன.

குதிரை நர்த்தனமாடியது. அந்த வார்த்தைகள் அவன் நினைவை விட்டு நீங்கவில்லை.

"எனக்கு நீ உனக்கு நான்."

மறுபடியும் அதே வார்த்தைகள் அவன் காதுகளைக் குடைந்தன. அவன் இதயத்தை ஏதோ ஒன்று இறுகிப் பிழிவது போன்று இருந்தது.

சிந்தனைக் குதிரையின் வேகம் தடைப்பட்டது. ஏதோ கோளாறு ஏற்பட்டுப் பின்னோக்கி இருந்த இடத்துக்கு வந்தது.

"எனக்கு நீ; உனக்கு நான்."

சமூகம் என்ற 'ஓட்டை'க் கப்பலில் பிரயாணம் செய்ய விரும்பாத இருவர் புதுமைப் படகேறி வாழ்க்கைப் பெருங் கடலில் செல்லும்போது புயல் வீசினால்... கப்பலில் உள்ளவர்களிடமிருந்து கருணையை எதிர்பார்க்க முடியுமா? முடியாது—கூடாது. 'எனக்கு நீ, உனக்கு நான்' என்ற எண்ணம்தான் அவர்களுக்குத் தேவை. அந்த எண்ணத்தில் கொண்டுள்ள நம்பிக்கைதான் அவர்களை இன்ப புரிக்கு இழுத்துச் செல்லும்.

"ஐயோ அந்த எண்ணம் எனக்கு ஏற்படாததால்தானே அவளை அடித்துவிட்டு அகந்தையோடு இங்கே வந்தேன்" என்றலறியது அவன் மனம். அங்கு உட்கார்ந்திருக்கவே அவனுக்குப் பிடிக்கவில்லை. எழுந்தான். வீட்டிற்கு வேகமாக நடந்தான்.

போகும்போதே அவன் உள்ளத்தில் ஒரு போராட்டம்.

"காதலர்களாய் இருக்கும் போது அரும்பிய சகிப்பும், பொறுமையும் கல்யாணமான பிறகு ஏன் கருகிவிடுகின்றன?"

"வெற்றி மமதை, அவர்களின் விட்டுக் கொடுக்கும் தன்மையைக் குட்டிச்சுவராக்கிவிடுகிறது."

"சேச்சே...... அப்படியிருக்க முடியாது. பிறகு வேறு என்ன காரணம்?"

"வேறு காரணமா? உம்...... காதல் புரியும் காலத்தில் காதலர்களுக்குக் கஷ்டம் ஏற்பட்டால் எதிர்கால இன்ப வாழ்வை எண்ணி அவற்றைத் தாங்கிக்கொள்ளுகிறார்கள் ஆனால் கல்யாணம் ஆனபிறகு கஷ்டம் ஏற்பட்டால்...... அவற்றைக் கண்டு அஞ்சி எதிர் காலமும் இதேபோல் இருண்டுதான் இருக்குமோ என்று எண்ணி நம்பிக்கையையும் பொறுமையையும் இழந்துவிடுகின்றனர். அதன் விளைவுதான் பூசலும், புயலும்."

"இதுதான் உண்மை......... எனக்கு இன்று ஆபீஸில் ஏற்பட்ட தொல்லையால்தானே என் தங்கத்திற்கு நான் இவ்வளவு துன்பமிழைத்தேன். பாவம்... அவள் இன்னேரம் என்னென்ன எண்ணி ஏங்கியிருப்பாள்!"

வீடு வந்துவிட்டது. போராட்டத்திற்குப் பிறகு பொறுமையா இழையும்! வெற்றியடைந்தவன் போடும் திட்டங்களில் வேகமும் விறுவிறுப்பும் இருக்காதா என்ன!

"தங்கம், தங்கம்" பழைய ஆத்திரம் அவன் குரலில் காணப்படவில்லை; அன்பு நிறைந்திருந்தது.

லேசாகக் கதவைத் தட்டினான். கதவு 'நாதாங்கி' போடாமல் இருந்ததால் தானாக விலகியது. கதவைத் தள்ளிக்கொண்டு உள்ளே சென்றான். அங்கே அவன் கண்ட காட்சி...உடைந்த உணவுக் கலம்; சிதறிய பருக்கைகள்; அந்தப் பருக்கைகளை இழுத்துச் சென்று கொண்டிருந்த எறும்புச் சாரிகள்; கவனிப்பாரற்றுக் கொழுந்துவிட்டெரிந்து கொண்டிருக்கும் விளக்கு.

அந்த வீடு இருந்த நிலை அணுகுண்டு விழுந்து அழிந்துபோன

நகரங்களின் சிறிய அளவு படம் போல இருந்தது.

அவன் கண்கள் தங்கம் இருக்குமிடத்தைத் துழாவின. அங்கே அவளைக் காணோம். அவன் எண்ணங்கள் சுழன்றன. கால்களில் ஒரு விறுவிறுப்பு. உடம்பு படபடத்தது.

சமையல் கட்டினுள் நுழைந்தான்.

"தங்கம், தங்கம்"... உதடுகள் அந்த வார்த்தையைப் 'பஜனை' செய்து கொண்டிருந்தன.

தங்கம் அங்கேதான் படுத்துக் கொண்டிருந்தாள்.

"அப்பாடா" என்று ஒரு மூச்சு அவன் இதயத்திலிருந்து வெடித்து வெளிவந்தது. ஆனால் அவன் கண்கள் கலங்கின.

"தங்கம்" என்று அழைத்துக் கொண்டே அவள் தலைப்பக்கத்தில் அமர்ந்தான். 'சில்'லென்று ஏதோ அவன் கையில் தட்டுப்பட்டது. குனிந்து பார்த்தான். தரையில் முத்து முத்தாக நீர்த் துளிகள் கிடந்தன. செல்லப்பனின் கண்கள் தங்கத்தை உற்று நோக்கின.

உதடுகளில் ஒரு சோகச் சாயல் படர்ந்திருந்தது. கண்ணுக்கும் காதுக்கும் நீர்க்கோடுகள் பாலம் கட்டியிருந்தன. அதைக் கண்டதும் செல்லப்பனுக்கு அடிவயிற்றிலிருந்து ஒரு பெருமூச்சு வந்தது. கண்களில் முட்டிக்கொண்டு நின்ற கண்ணீர் சிதறியது. மெதுவாகத் தங்கத்தின் கேசத்தை வருடினான். சற்றுநேரம் அமைதி.

"தங்கம்..." அந்தக் குரலில் தான் எத்தனை குழைவு!

அவள் புரண்டு படுத்தாள். அவனுக்கோ அவளிடம் அமைதியான முறையில் நான்கு வார்த்தைகள் பேசினால்தான் மனம் ஒருநிலைப்படும்போல் இருந்தது.

"தங்கம்" என்று மெதுவாகத் தட்டினான். அவள் விழித்துக் கொண்டாள். சற்றுநேரம் பிரமித்துப் போய்ப் பேசாமல் இருந்தாள்.

கணவனின் முகத்தில் அன்பொளியைக் கண்டவுடன் 'கேவிக்கொண்டு' அவன் மார்பில் முகத்தைப் புதைத்தாள்.

"அழாதே தங்கம், எதை பெதையோ நினைத்துக்கொண்டு ஆத்திரமாய் வீட்டுக்கு வந்தேன். அதுதான் எப்படியெல்லாமோ நடந்து போச்சு" என்று சொல்லி அவள் கண்களைத் துடைத்தான். அப்பொழுது அவன் விரல்கள் கன்னத்திலுள்ள வீக்கத்தில் பட்டவுடன் சட்டென்று பின்னடைந்தன.

"அடி பலமா விழுந்துட்டுதா தங்கம்?"

"அது கிடக்கட்டும். நீங்க சாப்பிட வாங்க."

அவள் குரலில் தெளிவு ஏற்பட்டிருந்தது.

"நீ சாப்பிடவில்லையா?"

அவள் எதையோ நினைத்துக் கொண்டவள் போல் சிரித்தாள்.

"என்ன தங்கம் சிரிக்கிறே? என்னடா சற்று முந்தி அடிச்சு உதைச்சு அட்டகாசம் பண்ணிட்டு இப்போ அன்பாப் பேசுறானேன்னு சிரிக்கிறியா?"

"அதெல்லாம் ஒன்றுமில்லே. உங்களுக்கு வந்த கோபம் இவ்வளவு சீக்கிரமாப் போய்விட்டதே என்றுதான் சிரித்தேன்."

"தங்கம் இப்பொழுது என்னத்துக்கு அதையெல்லாம் கிளறுகிறாய்? இன்று ஆபீஸிலே எனக்கும் என்னுடைய மேல் அதிகாரிக்கும் தகராறு. அவன் என்னமோ பெரிசா ஒன்றுகிடக்க ஒன்றை, என்னிடத்திலே ரொம்ப ஆத்திரமாக வந்து கேட்டான். நானும் ஆத்திரமாய் அவன்மேலே விழுந்து விட்டேன்."

"இருந்தாலும் உங்களுக்கு இவ்வளவு முன்கோபம் கூடாது. நாளைக்கு அவன் உங்கமேலே எதுவும் நடவடிக்கை எடுத்தா அப்புறம் என்ன செய்வதாம்?"

தங்கத்திற்கு இப்பொழுது செல்லப்பனின் வேலையைப் பற்றிய கவலைதான் பெரிதாக இருந்தது.

"இதற்காக நீ ஏன் இவ்வளவு கவலைப் படுகிறாய், தங்கம். கேட்பார் பேச்சைக் கேட்டுக் கொண்டுதான் அந்த அதிகாரி அவ்வளவு ஆட்டம் போட்டான். நாளைக்கே நான் போய் நம்மைப் பற்றிய விஷயங்களையெல்லாம் சொல்லி, இதனாலே தான் என்மேலே இவ்வளவு புகாரெல்லாம் என்பதைத் தெளிவாக்கி விடுகிறேன். பிறகு என்ன செய்கிறான் என்பதையும் பார்த்திடுவோம்."




"எனக்கென்னவோ பயமாய்த்தான் இருக்கிறது. என்னாலே உங்களுக்கு எவ்வளவு கஷ்டம்?"

"ஆரம்பித்து விட்டாயா? எது எப்படி நடந்தாலும் எனக்கு நீ. உனக்கு நான்... சரி நம்ம இரண்டுபேரும் இன்று சேர்ந்தாப்போலச் சாப்பிடணும். என்ன சொல்கிறாய்? எங்கே சாதத்தைப் போடு."

தங்கம் சிரித்துக்கொண்டு பரிமாற ஆரம்பித்தாள்.

அவர்கள் வாழ்விலே வெள்ளி முளைத்துவிட்டது. இனி விடிவு ஏற்படாமலா இருக்கப் போகிறது?

- முதலாளித்துவத்தை வேருடன் வெட்டி வீழ்த்தி
- ஆதிக்க வெறியர்களின் ஆணவத்தை அடக்கி
- மதப்பித்தர்களின் மடமையை ஒழித்துச்
- சுரண்டலற்ற சமுதாய அமைப்பை நிறுவி

**மக்கள் இன்பமாக வாழ ஆசிரியர்**
**எஸ். சதாசிவம் அவர்கள் எழுதிய**

| | |
|---|---|
| முதலாளித்துவம் ஒழிக! | 0-12-0 |
| கார்ல் மார்க்ஸ் | 0-12-0 |
| ஏழையின் அரசியல் | 0-8-0 |
| பெரியாரும், கவிஞரும், அண்ணாவும் | 0-8-0 |
| இதயக்குமுறல் (முற்போக்கு நவீனம்) | அச்சில் |

ஆகிய நூல்களைப் படியுங்கள்.

விற்பனைக் [கமிஷன்] 25 ... அனுப்பும் செலவு எங்களுடையது. 10 பிரதிகளுக்குக் குறைந்த ஆர்டரைக் கவனிப்பதில்லை. தனிப்பிரதி வேண்டுவோர் தபால் சார்ஜுடனும் சேர்த்து ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

விவரங்கட்கு :—

**இன்பவாழ்வுப் பதிப்பகம் (Regd.)**
ஆர். எஸ். புரம் -::- கோயமுத்தூர்

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
197795
சென்னை-600 008


# மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

## கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு : *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்
சிலோன் ஏஜண்ட் :
*NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st.,* கொழும்பு-11


Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD at PONNI ACHAKAM, 18, Seni Amman Koil Street, Tondiarpet, Madras—21.